பக்கங்கள்: 13
விலை : 30/-
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 13 திங்கட்கிழமை 28.12.2020 கதிர் 53

**இது ரகசியம் அல்ல!**

அரசியல் கூட்டுகளுக்குள் பல குளறுபடிகள் நடக்கும்.

பொதுவாக எதிர்த்தரப்புகளைப் பின்தள்ளி தாம் மேலெழுவதற்காகவே கட்சிகள், தரப்புகள், அணிகள் என்பன கூட்டுச் சேரும். கூட்டுச் சேர்ந்த பின்னர் அந்தக் கூட்டுக்குள் எப்படி மேலெழுவது என்ற போட்டி ஆரம்பமாகும். பக்கம் 02

# மாகாண சபைத் தேர்தல் வேண்டாம் தெற்கில் வலுக்கின்றது எதிர்ப்பலை

## கடும்போக்குவாத பௌத்த தேரர்கள், அமைச்சர்கள் ஓரணியில்

இந்தியாவின் கடும் அழுத்தத்தின் பிரகாரம் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில் ராஜபக்ஷ அரசு ஆராய்ந்து வருகின்ற நிலையில், அதற்கு எதிராகத் தெற்கில் கடும் எதிர்ப்பலைகள் எழுந்துள்ளன.

மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவையில் யோசனையொன்றை முன்வைத்துள்ளார். அந்த யோசனை தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தி கலந்துரையாடுவதற்கு கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பக்கம் 11

## மேலும் 668 பேருக்கு கொரோனா தொற்று

### 41 ஆயிரத்தைக் கடந்தது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் நேற்றும் 668 பேருக்குக்கொரோனாவைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 48 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 37 ஆயிரத்து 390 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. மொத்தத் தொற்றாளர்களில் 32 ஆயிரத்து 701 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 160 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கூட்டமைப்பு யோசனை இன்று

கொழும்பு, டிசெ.28

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யோசனைத் திட்டம் பெரும்பாலும் இன்று சம்பந்தப்பட்ட குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இந்த யோசனைத் திட்டத்தை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுடன் பக்கம் 11

## ராஜபக்ஷ அரசைக் கவிழ்க்க மைத்திரி அணி மீண்டும் சதி

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆவேசம்



ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மீண்டும் சதித்திட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளமிறங்கியுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களை விரைவில் அம்பலப்படுத்துவோம்.

- இவ்வாறு இராஜாங்க பக்கம் 02

# அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி நல்லூரில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தக் கோரியும், அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் பின்புறமாகவுள்ள நல்லை ஆதீன முன்றலில் பக்கம் 11

## வடக்கு, கிழக்குக்கு சிவப்பு எச்சரிக்கை!

வடக்கு, கிழக்கு உட்பட்ட பகுதிகளுக்கு கடும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதால் மக்களை அவதானமாக இருக்குமாறு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. பக்கம் 11



## திரையரங்குகளை ஜனவரி முதல் திறக்கப் பிரதமர் மஹிந்த அனுமதி

மசுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஜனவரி முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகளைத் திறப்பதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார். பக்கம் 02

## திறக்கப்பட்டது இரணைமடு; மக்களே மிக மிக அவதானம்

வன்னியில் தொடரும் மழையால் நீர்மட்டம் அதிகரித்துவரும் நிலையில் இரணைமடு வான் கதவுகள் இரண்டு நேற்று திறக்கப்பட்டுள்ளன.

சம்பிரதாய நடைமுறைகளைத் தொடர்ந்து குளத்தின் இரண்டு கதவுகள் தலா 6 அங்குலம் அளவுக்கு திறக்கப்பட்டுள்ளன.

36 கொள்ளளவைக் கொண்ட குளத்தின் நீர்மட்டம் பக்கம் 02




## சரணாகதியா? தனிவழியா? 30இல் சுதந்திரக் கட்சி முடிவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி இரவு 7 மணிக்கு கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் பக்கம் 02

# மேயர் வேட்பாளர் ஆனோல்ட்தான்!

### கூட்டமைப்பு உடும்புப் பிடி நல்லூர் விடயமும் முடிவில்லை



யாழ்ப்பாணம், டிசெம்பர் 27

யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் பதவியை இழந்த இமானுவல் ஆனோல்டையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மீண்டும் மேயர் வேட்பாளராகப் பிரேரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் பக்கம் 02



# 191 ஆக உயர்ந்தது கொரோனாச் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 191 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 178 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனி, இது, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அது உருவெடுத்த காலம் முதலே அதன் தலைமைத்துவக் கட்சியான இலங்கைத் தமிழரசின் மேலாதிக்கம் தொடர்பில் மற்றைய கூட்டுக் கட்சிகளுக்கு பலத்த அதிருப்தி உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்தாபகப் பங்காளிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவை எல்லாம் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியமையின் பின்னணியில் இந்த மேலாதிக்கத்தான் பிரதான காரணமாக அமைந்தது என்பது கண்கூடு.

அதனால் விவகாரம் கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்ட கதையாகிவிட்டது.

சுரேஷ் பிரேமச்சந்திரன், நீதியரசர் விக்னேஸ்வரன், ஆனந்தசங்கரி, அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம், சிறிகாந்தா போன்ற அரசியல்வாதிகள் எல்லாம் கூட்டமைப்புக்குள் இருந்து, இந்த மேலாதிக்கத்தை முறியடிக்க இயலாமல் வெளியே போனவர்கள்தான்.

ஆனால் சித்தார்த்தனும், செல்வமும் அப்படி வெளியே போகவுமில்லை. சளைக்கவுமில்லை. உள்ளேயே இருந்தபடி இப்போது மெல்ல மெல்லத் தமிழரசுக்குள் குழப்பங்களுக்கு வழிகாட்டி, கூட்டமைப்புக்குள் அதன் மேலாதிக்கத்தைத் தகர்க்கும் தந்திரோபாயத்தைக் கனகச்சிதமாக முன்னெடுத்து வருகின்றார்கள் என்பது வெளிப்படையானது.

தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்துக்கு ஆப்பு வைக்கிறோம் என்ற எண்ணத்தில் அவர்கள் மேற்கொள்ளும் தந்திரம் – அடுத்துக் கெடுப்பது. அது நன்கு வேலை செய்கின்றது. ஆனாலும் தமிழரசைக் கரைப்பது என்பது கூட்டமைப்பையும் கரைப்பதுதான் என்று புரியாமல் முன்னெடுக்கும் தந்திரோபாயம்தான் இது. மேல் கிளையில் இருந்து கொண்டு அடி மரத்தை வெட்டும் வேலை என்று புரியாமல் அதை அவர்கள் முன்னெடுக்கின்றமைதான் அரசியல் அறியாமை.

கடந்த பொதுத் தேர்தலின் முடிவால் தமிழரசுக்குள் ஏற்பட்ட கசப்புணர்வை – பிளவை – உரசல்களை – சித்தரும், செல்வமும் வசமாகத் தமது இந்தத் திட்டத்துக்குப் பயன்படுத்துகின்றனர் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

நான் முன்னர் குறிப்பிட்டபடி தேர்தல் தோல்வி வெப்பியாரத்தில் இருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, இந்த இருவரும் மற்றும் தமது கட்சிக்குள் வேறு சிலரும் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் இழுபடுகின்றார்.

'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல' – சுமந்திரனை நொட்டுகிறேன் என்று எண்ணிக்கொண்டு மேற்படி இருவரின் வலையில் விழுந்து தமக்கும் தமது கட்சிக்கும் மண் வாரிப் போடுகின்றார் மாவை சேனாதிராசா.

மீண்டும் யாழ் மேயர் தெரிவுக்கு ஆர்னோல்ட்டையே நியமிப்பது என்ற 'மாவை அண்ட் கோ'வின் முடிவு கூட சித்தர், செல்வம் விரித்த வலைதான். சி.வீ.கே.சிவஞானம் அந்த வலை விரிப்பின் மற்றொரு பங்காளி.

மாவை – சி.வீ.கே. கூட்டின் இணக்கத்தோடு முன்வைக்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தின் முடிவு இரண்டில் ஒரு விளைவுகளைத் தரும் என்பதுதான் இப்போதைய நிலைமை.

ஒன்றில் – ஆர்னோல்ட் மீண்டும் மேயராவதுடன் குறுகிய காலத்தில் சபை கலையும்.

இல்லையேல் – மேயர் தேர்வில் ஆனோல்ட் தோற்க, அந்தப் பதவியில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் அமருவார்.

இந்த இரண்டில் எது நடந்தாலும், அது தமிழரசுக் கட்சிக்குப் பெரும் பின்னடைவுதான்.

சொலமன் சிறில் யாழ் மேயராக வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்போரின் கனவு நிறைவேறலாம். ஆனால் கடைசியில் தமிழரசு தோற்பது நிச்சயம்.

பங்காளிக் கூட்டுத் தலைவர்கள் இருவரில் ஒருவரிடம், *"நீங்கள் ஆர்னோல்டை நிறுத்தினால், மணிவண்ணன் அல்லவா மேயராகிவிடுவார்?"*– என்று கேட்டார்களாம்.

*"அப்படியா? அவர் நல்ல மேயர் தானே…!"*– என்று தெளிவாகப் பதிலளித்தாராம் அந்தத் தலைவர்.

தமிழரசும் தோற்றுப் பின்னடைவு கண்டு, யாழ்ப்பாணத்துக்கும் நல்ல மேயர் கிடைத்துவிட்டால் நல்லதுதானே என்பது அந்தத் தலைவரின் திருப்திக்கும் காரணம்.

இது புரியாமல், அவர்களின் கதையைக் கேட்டு மாவை சேனாதிராசா தனது கட்சிக்கும் தனக்கும் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டிருப்பதுதான் வேடிக்கையின் உச்சம்.

ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவை எழுத்தில் கேட்டால், அவர் தந்துவிடுவார் என்று தமிழரசில் சில பிரகிருதிகள் நம்பிக்கை கூறுகின்றனர்.

ஆனோல்ட் அல்லாத வேறு ஒரு கூட்டமைப்புக்காரருக்கு ஈ.பி.டி.பி. ஆதரவு தந்தாலும் தருமே தவிர, ஆர்னோல்ட்டுக்கு அல்ல என்று அடித்துக் கூறுகின்றன அக்கட்சியின் வட்டாரங்கள்.

*'மாகாணசபை என்றாலும் ஆர்னோல்ட், மேயர் என்றாலும் அவர்தான், நாடாளுமன்றத் தேர்தல் என்றாலும் அவர்தான், திரும்பவும் மேயர் தெரிவு என்றாலும் அவர்தான், இது முடிந்து மாகாணசபை என்றாலும் அவர்தான்… !"* – இப்படிக் கேட்டு தமிழரசின் சில வட்டாரங்கள் சினக்கின்றன.

ஆனால், ஆர்னோல்ட்டுக்குப் பக்கபலமாக நிற்கும் ஊடகத்தரப்பின் பின்புலம் – பலம் – தளம் – களம் – வளம் – தெரியாத தரப்புகள்தான் இப்படிப் பேசுகின்றன. ஆனால் அந்த வளத்தின் நீள, அகலங்கள் மாவை சேனாதிராசாவுக்குத் தெரியும்.

பொதுத் தேர்தலில் விட்டதை அவர் பிடிக்க வேண்டாமா? அதனால்தான் அந்த வளத்தின் பின்னால் தொங்கிக் கொண்டிருக்கின்றார் மாவை என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்தத் தளத்தின் செல்வாக்கில், நேற்றைய காலைத் தீர்மானத்தைக் கொண்டாட இயக்கச்சி விடுதி ஒன்றில் நேற்றிரவு 'பார்ட்டி' ஒன்று நடந்ததாகவும் தகவல். நல்லது. நடக்கட்டும்.

மாவையின் தரம் – நிலைமை – இவ்வளவு தூரம் தாழ்ந்து போனமை தமிழர் தலையெழுத்து. அவர் தலைமையில் தமிழரசு, தொங்கி கொண்டிருப்பது தமிழர் தலைவிதி…!

– மின்னல்–

## சரணாகதியா? தனி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது.

சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடும் அதிருப்தியிலேயே இருக்கின்றது. தமது கட்சிக்கு உரிய கவனிப்புகள் இல்லை என சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வெளிப்படையாகவே விமர்சித்து வருகின்றனர். எனினும், ஆளுங்கூட்டணியிலிருந்து வெளியேறுவதா, இல்லையா என்பது தொடர்பில் அக்கட்சி எதனையும் அறிவிக்கவில்லை.

ஆனாலும் சு.கவிலுள்ள ஒரு சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அத்துடன், மாகாண சபைத் தேர்தலில் தனித்து அல்லது எதிரணியுடன் கூட்டணி அமைத்து களமிறங்க வேண்டும் என்ற யோசனையும் சுதந்திரக் கட்சிக்குள் ஒரு சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அக்கட்சியின் மத்திய செயற்குழு கூடுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச வேண்டிய விடயங்கள் பற்றியும் இங்கு விவாதிக்கப்படவுள்ளன.

## மேயர் வேட்பாளர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் கூடி முடிவெடுத்துள்ளனர் என மிக நம்பகமாக அறியவந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் இரு தடவைகள் தோல்வியுற்றமையால் அதனை சமர்ப்பித்த மேயர் ஆனோல்ட் பதவி இழந்தார். இதனால் எதிர்வரும் 30ஆம் திகதி சபை உறுப்பினர்கள் மத்தியில் மீண்டும் முதல்வர் தேர்வை நடத்த உள்ளூராட்சி ஆணையாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

இதன் பிரகாரம் கட்சிகள் தமது முதல்வர் வேட்பாளர் தொடர்பில் கூடி ஆராய்ந்து வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 23ஆம் திகதி ஆராய்ந்தபோதே மீண்டும் ஆனோல்டையே நியமிக்க வேண்டும் எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் மற்றும் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோர் வலியுறுத்திக் கருத்துகளை தெரிவித்திருந்தனர்.

இறுதி முடிவினை எடுக்கும் வகையில் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் தலைவர்களான மாவை.சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் சி.வீ.கே.சிவஞானம், குலநாயகம், பா.கஜதீபன் ஆகியோர் நேற்றுக் காலை 11 மணியளவில் கூடி மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை தொடர்பில் ஆராய்ந்தனர்.

இக் கூட்டத்தின் இறுதியில் மாநகர சபையில் மீண்டும் ஆனோல்ட்டை மேயர் வேட்பாளராக நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதே நேரம் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பதவியை ரெலோவிற்கு வழங்க வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்த நிலையில் நல்லூர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பதவிக்கு மதுசுதனை தவிசாளராக நியமிக்குமாறு செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்த சமயம் தற்போது சபையில் ஐங்கரநேசன் அணியினர் அதற்கு சம்மதிக்க மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார் சி.வீ.கே சிவஞானம் என அறிய வந்தது. அதேசமயம் மதுசுதனிற்கு எமது கட்சியும் ஆதரவளிக்க மாட்டாது என சித்தார்த்தனும் அங்கு தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

இதேநேரம் கோப்பாய் பிரதேச சபை தவிசாளர் பதவியும் இரண்டு ஆண்டுகள் அடிப்படையில் பங்கீடு செய்வதாகவே தீர்மானிக்கப்பட்டது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அச்சமயம் அங்கே தற்போதைக்கு மாற்றம் தேவை இல்லை, அதன் தவிசாளர் திறமையாகவே செயல்படுகின்றார் என சி.வீ.கே.சிவஞானம் குறிப்பிட்டாராம்.

இவ்வாறு தவிசாளர் வேட்பாளர் யார் எனத் தீர்மானிக்கப்படாத நல்லூர் சபை தொடர்பாக மீண்டும் சபை உறுப்பினர்களுடன் கூடி ஆராய்வதோடு கட்சியின் முடிவினை எதிர்வரும் 29ஆம் திகதி யாழ். மற்றும் நல்லூர் சபைகளின் உறுப்பினர்களிற்குத் தெரியப்படுத்துவது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

நேற்றைய முடிவை நாளை 29 ஆம் திகதி வரையில் வெளியில் கூறுவதில்லை எனவும் தெரிவித்து நேற்றைய கூட்டத்தை நிறைவு செய்தனர் எனவும் அறிய வந்தது.

யாழ் மாநகரசபையில் மேயர் வேட்பாளர் ஒருவரை இணைந்து தேர்வு செய்வதில் மற்றைய இரு பிரதான கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.டி.பியும் இணக்கம காணாத வரையில் கூட்டமைப்பு நிறுத்தக் கூடிய மேயர் வேட்பாளர் – அது ஆனோல்ட்டானாலும் – வெல்ல முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனால், யார் வென்று மேயரானாலும் அதன் பின்னர் மீண்டும் வரவு – செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க வைக்க வேண்டும். இல்லையேல் சபையே கலைந்ததாகிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

"யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு மீண்டும் ஆனோல்டை மேயராக நியமித்து மூன்றாவது தடவையும் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால் அதனால் ஏற்படும் அரசியல் சீரழிவுக்கான பொறுப்பையும் மூன்று கட்சிகளின் தலைவர்களும் சி.வீ.கே. சிவஞானமும்தான் பகிரங்கமாக ஏற்க வேண்டுமேயன்றிக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களாகிய நாம் அல்லர் என்பதனை மக்களுக்கு நாம் முற்கூட்டியே தெரிவிக்க நேரிடும்" – எனக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்.

## திறக்கப்பட்டது இரணைமடு;..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது 34 அடியாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரணைமடுக் குளத்தின் கனகராயன் ஆற்றுப்படுக்கையில் உள்ள முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, ஊரியான், சிவபுரம், நாகேந்திரபுரம் உள்ளிட்ட தாழ் நில பகுதியில் உள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

## திரையரங்குகளை ஜனவரி ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள திரையரங்குகள் ஜனவரி முதலாம் திகதி முதல் திறக்கப்படும்.

திரையரங்குகள் மூடப்பட்டுள்ளமையால் கலைக்கும், கலைஞர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் திரைப்பட தயாரிப்பாளர்கள், திரைப்பட இயக்குநர்கள் மற்றும் திரைப்பட கண்காட்சியாளர்கள் சங்கம் உள்ளிட்ட கலைஞர்கள் பலர் சமீபத்தில் பிரதமருக்கு அறிவுறுத்தியிருந்தனர்.

அதன் பிரதிபலனாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு மதிப்பளித்து திரையரங்குகள் திறக்கப்பட வேண்டும் எனப் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

திரைப்படத்துறையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு ஒருபோதும் தயங்காது என்று தெரிவித்த பிரதமர், கொரோனா காரணமாக திரையரங்குகளை மூடுவதால் திரையரங்கு உரிமையாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும், திரைப்பட தயாரிப்பாளர்கள் முகங்கொடுத்துள்ள நெருக்கடி மற்றும் திரைப்பட துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து கலைஞர்கள், பல்வேறு தொழில் வல்லுநர்கள் முகங்கொடுத்துள்ள பாதிப்புகளைத் தவிர்த்தல் மற்றும் இரசிகர்கள் குறித்து கவனம் செலுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

திரையரங்குகளைத் திறக்கும்போது குறித்த திரையரங்குகள் உரிய முறையில் தொற்று நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் திரைப்படங்களைப் பார்வையிடுவதற்கு திரையரங்குகளுக்கு வருகை தருவோரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கொரோனா சவாலுக்கு மத்தியில் கலைஞர்களையும், திரைப்படத் துறையையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் பல கலைஞர்கள் பிரதமரின் இந்தத் தீர்மானத்துக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## ராஜபக்ஷ அரசைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்குள் இருந்துகொண்டே வெட்கம் இல்லாமல் அரசுக்கு எதிரான செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சூழ்ச்சியில் ஈடுபடுவோரை விரைவில் அரசு அம்பலப்படுத்தும். அப்போது அவர்களின் போலி முகத்தை மக்கள் அறிவார்கள்.

எந்தச் சதித்திட்டங்களாலும் ராஜபக்ஷ அரசைக் கவிழ்க்கவே முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அரசுக்குள் இருந்துகொண்டே சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினருடன் 'டீல்' பேசுபவர்கள் விரைவில் முகவரியற்றுப் போவார்கள் – என்றார்.

# அரசியல் கைதிகளின் விடுவிப்புக்கு ஒற்றுமையுடன் செயற்பட்டு உதவுக!

## அரசியல் பிரமுகர்களிடம் உறவுகள் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த தினங்களாக அரசியல் கட்சி தலைவர்களையும் ஆன்மீகத் தரப்பினரையும் அவர்கள் சந்தித்து வருகின்றனர்.

இதற்கமைவாக, கடந்த (சனிக்கிழமை) தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீவிக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அத்தோடு நல்லூர் திருஞான சம்பந்தர் அதீன பிரதம குருக்கள் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை ஆதீனத்தில் சந்தித்து கலந்துரையாடிய பின்னர், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளையும் சிவகுரு ஆதீனத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.



தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரை தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தரப்பில் அருட்பணி ஜெபரணட்னம் அடிகளாரையும், நீதி சமாதானத்துக்கான ஆணைக் குழுவின் தலைவர் அருட்பணி வணக்கத்துக்குரிய மங்களராஜாவையும், அருட்பணி வணக்கத்திற்குரிய இ.ம.வி.ரவிச்சந்திரனையும் சந்தித்து விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

முன்னதாக, யாழ். நாகவிகாரை பீடாதிபதி சங்கைக்குரிய விமல தேரரையும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துமாறு கோரி நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனை நேரில் சந்திக்க முயற்சித்த போது அவர் பயணத்தில் இருந்த காரணத்தால் தொலைபேசி ஊடாக விடயங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஒன்றிணைந்த வகையில் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு பரிபூரண ஆதரவை தருவதாக அவர் கூறியிருந்தார் எனவும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி ஏனைய தரப்புகளை தொடர்ந்து சந்தித்து வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நுவரெலியா லிந்துவையில் 225 பேருக்குப் பி.சி.ஆர்!

நுவரெலியா – லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி அதிகாரப் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் 225 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொள்ளப்பட்டதாக, லிந்துலை பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதிகளில் அண்மைக்காலமாக கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றமையோடு, இதுவரை 50 பேர் இணங்காணப்பட்டு கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமையையடுத்து, குறித்த பிரதேச சபை முடக்கம் செய்யப்பட்டதுடன், அதில் தொழில் புரிந்த 43 இற்கும் மேற்பட்ட நபர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனையும், இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த சுமார் 180 பேருக்கும் என மொத்தம் 225 பேருக்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

## மாகாணசபைத் தேர்தலுக்கு முன் புதிய அரசமைப்பு வர வேண்டும்!

### வலியுறுத்துகிறார் அமைச்சர் வீரசேகர

புதிய அரசமைப்பு உருவாக்கும் பணிகள் நிறைவடையும் வரை மாகாண சபை தேர்தல் நடத்தக்கூடாது என்று பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த (சனிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பல சந்தர்ப்பங்களில் மாகாண சபை தொடர்பான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் மாகாண சபை முறைமை தொடர்பான புதிய சட்டங்கள் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படும் என அமைச்சர் சரத் வீரசேகர கூறினார்.

ஒரு நாடு, ஒரு சட்டம் என்ற கருத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ள நிலையில் ஒன்பது வெவ்வேறு மாகாணங்களில் வெவ்வேறு விதிமுறைகளை செயற்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மாகாண சபை முறையை அரசாங்கம் முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும் என்றும் பொது பாதுகாப்பு



அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆகவே நடைமுறையில் உள்ள முரண்பாடுகள் காரணமாக, புதிய அரசமைப்பை உருவாக்கும் வரை மாகாண சபை தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

## இரு பிரதேச செயலகப் பிரிவுகள் இரத்தினபுரியில் தனிமைப்படுத்தல்!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



இரத்தினபுரி மாவட்டத்தின் இரு பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பல பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் கொடகவெல மற்றும் எஹலியகொட ஆகிய பகுதிகளில் சில இடங்கள் முடக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொடகவெல பிரதேச சபைக்குட்பட்ட இறக்குவானை நகர், இறக்குவானை வடக்கு, இறக்குவானை தெற்கு, மசுமுல்ல, கொட்டலை ஆகிய பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், எஹலியகொட பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மின்னான, விலேகொட, யகுதாகொட, அஷ்காகுல்ல வடக்கு, போபத்த ஆகிய பகுதிகளும் முடக்கப்பட்டுள்ளன.

கொரோனா த் தொற்று நோயாளிகள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே இந்த த் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## வவுனியா சந்தையில் 140 பேருக்கு பி.சி.ஆர்.



வவுனியா மரக்கறி சந்தை மற்றும் அதனுடன் தொடர்புடைய 140 பேருக்கு இரண்டாம் கட்டமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை பெருகிவரும் நிலையில் பல்வேறு தரப்பினருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வவுனியா மொத்த விற்பனை சந்தையில் பணிபுரியும் நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு கடந்த வாரம் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. எனினும் அவர்களில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

இந் நிலையில் வவுனியா மரக்கறிச்சந்தை மற்றும் அதனுடன்தொடர்புடைய 140 பேருக்கு இரண்டாம் கட்டமாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.



## 20 ஆயிரம் கிலோ மஞ்சளுடன் கலமெட்டியவில் நால்வர் கைது!

ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலமெட்டிய மீன்பிடி துறைமுகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பொலிஸ் விசேட அதிரடிப்படை யினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக இந்நாட்டுக்கு எடுத்துவரப்பட்ட உலர்ந்த மஞ்சள் தொகையுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மீன்பிடி படகொன்றை அவதானித்த விசேட அதிரடிப்படையினர் அதனை சோதனைக்குட்படுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து குறித்த படகில் எடுத்து வரப்பட்ட 20 ஆயிரம் கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் தொகையும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மஞ்சள் தொகையை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு லொறிகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் கலமெட்டிய, குடாவெல்ல,கோட்டகொட மற்றும் பேருவளை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவிலிருந்தே இந்த மஞ்சள் தொகையை கொண்டுவந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில் இந்த கடத்தல் செயற்பாடுக்கு மேலும் சிலர் உதவி ஒத்தாசைகளை வழங்கியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதனால் இது தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஹுங்கம பொலிஸாருடன் இணைந்து விசேட விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்பின் குளறுபடி முடிவு

'வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறுகின்றது'.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திமிர்த்தன அரசியல் போக்கை இப்படித்தான் விமர்சிக்கலாம் போல தோற்றுகின்றது.

திட்டவட்டமான அரசியல் ஏற்பாடுகள் இல்லாமல், வீம்புத்தனமான போக்கில் முடிவெடுக்கும் தமிழ்க் கூட்டமைப்பு, வானத்தில் போகும் பிசாசை ஏணி வைத்து இறக்கி, மடியில் கட்டிவிட்டு, குடையுது, குடையுது என்று குதிக்கப் போவது நிச்சயம்.

யாழ். மாநகரசபை விவகாரத்தைக் கூட்டமைப்புத் தலைவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் சின்னத்தனமான அரசியல் போக்கைக் கையாண்டு குழப்பியடிக்கப் போகின்றார்கள் என்பது திண்ணம்.

ஜனநாயகம் என்பது மக்கள், மக்களை ஆள்வது.

அதே போல நாட்டின் இறைமை மக்களுக்குரியது. அந்த இறைமையை அவர்கள் எவ்வாறு பிரயோகிப்பார்கள், பிரயோகிக்க வேண்டும் என்பதை நாட்டின் அரசமைப்பே தெளிவாகக் கூறியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் சர்வஜனவாக் கெடுப்பு ஆகியவை மூலம் மக்கள் தங்கள் இறைமையைப் பிரயோகிப்பர் என்று அரசமைப்புக் கூறுகின்றது.

நடைமுறையில் இப்போதுள்ள அரசமைப்பு 1978 இல் கொண்டு வரப்பட்டபோது மேற்படி மூன்று தேர்தல்களும்தான் முக்கியமானவையாக இருந்தன. அப்போது மாமாகாணசபை முறைமை இருக்கவில்லை. அது, 1988 இல்தான் கொண்டுவரப்பட்டு அரசமைப்புக்குள் 13ஆவது திருத்தம் மூலமாகச் சேர்க்கப்பட்டது.

ஆனாலும் அந்த மாகாணசபைத் தேர்தலும் மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் ஒரு முறைமை என்று உயர்நீதிமன்றம் பின்னர் தனது தீர்ப்பு ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தியது.

அத்தகைய மக்களின் இறைமையைப் பிரயோகிக்கும் மாகாண சபைத் தேர்தல்கள் கடந்த சில வருடங்களாக நடத்தப்படவில்லை. மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் ஒரு முறைமை மறுக்கப்பட்டிருக்கின்றது. மாகாண சபைகள் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதிகளான ஆளுநர்கள் மூலம் நிர்வகிக்கப்படும் அவலம் தொடர்கின்றது.

இத்தகைய இறைமை மறுப்புக்கு – மாகாணசபைகளைத் தமது தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மக்கள் நிர்வகிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டமைக்கு – யார் காரணம் தெரியுமா?

இவ்விடயத்தில் முக்கிய குற்றச்சாட்டு விரல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக நீள்வது மறுக்க முடியாத விடயமாகும்.

தேசிய ரீதியில் – இலங்கை முழுவதும் – ஒன்பது மாகாணங்களிலும் இன்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபைகள் இல்லை.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்தினால், தமது 'பொட்டுக்கேடு' – உண்மை நிலைமை – அம்பலமாகிவிடும் என்று அஞ்சிய ரணிலின் 'தொடைநடுங்கி' நல்லாட்சி அரசு அந்தத் தேர்தலை நடத்தாமலிருப்பதற்காக சட்டக் குளறுபடிகளை எல்லாம் தாராளமாகக் கையாண்டது. அவையனைத்துக்கும் உதவி, ஒத்தாசை புரிந்து, முண்டு கொடுத்துக் காப்பாற்றியது கூட்டமைப்புத்தான்.

கூட்டமைப்பின் தயவில் – அதன் தயவை மட்டுமே நம்பி – தாக்குப் பிடித்த நல்லாட்சி அரசைக் கொண்டு, கூட்டமைப்பு நினைத்திருந்தால் மாகாணசபைத் தேர்தலை எப்போதோ நடத்தப் பண்ணியிருக்கலாம். ஆனால் கூட்டமைப்பு அதனைச் செய்யவே இல்லை.

அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபை நிர்வாகங்கள் ஏதும் ஆட்சியில் இல்லாதமையும், நடைமுறையில் இல்லாத அந்த ஆட்சி முறைமையையே கோட்டா அரசு முழுமையாக அழித்து, அதற்கு நிரந்தரமாகக் கொள்ளி வைப்பதற்கான வாய்ப்பையும் தந்து நிற்பது கண்கூடு.

தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை நிர்வாகங்கள் நாட்டில் இல்லாமல் போனமைக்குக் காரணமான கூட்டமைப்பு இப்போது அந்த வழியில், யாழ் மாநகரசபையிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலைமையை உருவாக்கத் தேடி அலைகின்றது போலவே தோன்றுகின்றது.

மேயர் வேட்பாளராக ஆர்னோல்ட்டையே மீண்டும் நிறுத்த வேண்டும் என்ற கூட்டமைப்பின் காரணமற்ற பிடிவாதம், ஆர்னோல்ட்டை மீண்டும் மேயராக்க வழிசெய்தாலும் கூட, களநிலைவரப்படி மேயர் ஆர்னோல்ட்டினால் மூன்றாவது தடவை கூட ஒரு வரவு – செலவுத் திட்டத்தை சபையில் நிறைவேற்ற வைக்க முடியாது என்பதுதான் யதார்த்தம்.

கூட்டமைப்பின் – மாவை, சித்தார்த்தன், செல்வம், சி.வீ.கே. சிவஞானத்தின் – தேவையற்ற பிடிவாதத்தினால் சபை முன்கூட்டியே கலையும் நிலைமை வருமானால் – முழு மாகாணசபைகளையுமே மக்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலம் நிர்வகிக்கும் வாய்ப்புக்கு ஆப்புவைத்த உண்மையான குற்றத்துக்குப் பொறுப்பாகவிருக்கும் கூட்டமைப்பு, அதே குற்றத்தை யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களுக்கும் இழைத்ததாகி விடும். கூட்டமைப்பின் மற்றொரு குளறுபடியாக இது கட்டவிழும்.

# கொரோனா பிரித்தானியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் கூட மாற்றம் அடையலாம்!

## எச்சரிக்கின்றார் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர



நாட்டில் வைரஸ் பிறழ்வு ஏற்படக்கூடும் என்பதால் நாட்டில் கொரோனா தொற்று பரவலை முடிவுக்குக் கொண்டுவருவது மிக முக்கியமானது என சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் பிரித்தானியா அல்லது ஐரோப்பாவில் மட்டுமல்ல இலங்கையிலும் மாறக்கூடும் என்பதால் விரைவில் வைரஸிலிருந்து விடுபடுவது மிக முக்கியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒருவர் புதிய கொரோனா பிறழ்வுக்கு ஆளானாரா என்பதை அடையாளம் காண்பது கடினம் என்றும், ஏனெனில் பெரும்பாலான கொரோனா தொற்று நோயாளர்கள் அறிகுறியற்றவர்கள் என்றும் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

ஒரு சாதாரண பி.சி.ஆர். சோதனையால் வைரஸின் விகாரத்தை வேறுபடுத்த முடியாது என்றும் மரபணுக்கூறுகளை ஆய்வு செய்வதிலிருந்து மட்டுமே அதனை அடையாளம் காண முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட கொவிட் – 19 வைரஸின் இரண்டாவது அலை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனக் கூறிய அவர், மக்கள் ஒத்துழைப்பை வழங்கினால் கட்டுப்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் கொரோனா முதல் மரணம் பதிவானது!

மட்டக்களப்பில் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் முதல் மரணம் நேற்று முன்தினம் மாலை பதிவாகியுள்ளது.

காத்தான்குடியைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர், இரத்தம் மாற்றும் சிகிச்சை மேற்கொண்டுவந்த நிலையில் கொரோனா தொற்று காரணமாக அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் உயிரிழந்திருந்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த ஒருவரின் இறப்பு சனியன்று பதிவாகியுள்ளது.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளர்களின் உயிரிழப்பு ஐந்தாக அதிகரித்துள்ளது.

# யானை உயிரிழப்பு; விசாரணை ஆரம்பம்!



கிளிநொச்சி, கல்மடு பிரதேசத்தில் உயிரிழந்த நிலையில் யானை பிரதேச மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வயல் நிலத்தை பார்வையிட சென்ற பொது மக்கள் யானை உயிரிழந்திருப்பது தொடர்பில் கிராம சேவையாளர் ஊடாக வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

உயிரிழந்த யானை தந்தந்துடன் காணப்படுவதுடன், மக்கள் அதனை பார்வையிட்டு வருகின்றனர். குறித்த பகுதி அடர் காட்டை அண்மித்த பகுதி ஆகும்.

இந்த நிலையில் யானை உயிரிழந்தமை தொடர்பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிசாரும், வன ஜீவராசிகள் திணைக்களமும் ஆரம்பித்துள்ளனர்.

# பூநகரி - பச்சிலைப்பள்ளி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர்களுக்கு இடமாற்றம்!

பூநகரி, பச்சிலைப்பள்ளி மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர்களுக்கு இடமாறுதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலாளராக செயற்பட்டு வரும் எஸ்.கிருஷ்னேந்திரனை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகவும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த பரமோதயான் ஜெயராணியை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராகவும், ஒட்டுசுட்டான பிரதேச செயலகத்துக்கு முதலாவது பிரதேச செயலாளராக பொறுப்பேற்று, கடமையாற்றி வரும் த.அகிலன் பூநகரி பிரதேச செயலாளராகவும் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த இடமாற்றம் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனைவியைக் காணவில்லையாம் கணவர் பொலிஸில் முறைப்பாடு!

உறவினர் வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறி சென்ற, மனைவியையும் பிள்ளையையும் காணவில்லை என அவரது கணவரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த கணவர் –

வவுனியா – வெளிக்குளம் பகுதியை சேர்ந்த 22 வயதுடைய ராஜா வினிதா என்ற எனது மனைவி கடந்த 13 ஆம் திகதி மாலை, உறவுக்காரர் வீட்டுக்கு சென்றுவருவதாக எனது தாயாரிடம் கூறிவிட்டு சென்றுள்ளார்.

குறித்த நேரத்தில் நான் உறங்கிக்கொண்டிருந்தமையால் அவர் சென்றமையை அறிந்திருக்கவில்லை.

எனினும் நீண்ட நேரம் ஆகியும் மனைவி வீட்டுக்கு வராதமையால் அவர் சென்றார் எனத் தெரிவிக்கப்படும் உறவினர் வீடுகளில் சென்று பார்த்தபோது அவர் அங்கு வரவில்லை எனத் தெரிவித்தனர்.

அவரது தொலைபேசியும் இயங்கவில்லை. இந்நிலையில் வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளேன்.– என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அந்தப் பெண் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள், 076 9080042 என்ற கணவனின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா உடல்கள் தகனம்: தொடர்ந்து நடைபெறவேண்டும்!

## முருந்தெட்டுவே ஆனந்த தேரர் வலியுறுத்தல்



இலங்கை ஒரு பௌத்த நாடாகும். இங்கு சிங்களவர்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஒட்டுமொத்த நாட்டுக்கும் பொதுவான ஒரு சட்டமும் நிர்வாகமும் காணப்படவேண்டும். ஆகவே, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைத் தகனம் செய்யும் கொள்கை தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டும். சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது என்ற அடிப்படையில் பிறிதொரு தரப்பினரால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு அமைவாகத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படக்கூடாது என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு :-

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களைத் தகனம் செய்ய வேண்டாம் என்றும் அவற்றை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் தற்போது தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. தற்போதைய அரசாங்கம் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கொள்கையின் அடிப்படையிலேயே ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்டது.

இது இவ்வாறிருக்க, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் புதைப்பதால் அதிலிருந்து மேலும் வைரஸ் பரவுவதற்கான சாத்தியம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே சடலங்களை உரிய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யவேண்டும் என்ற தீர்மானம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது தமது மதநம்பிக்கைக்கு முற்றிலும் முரணானது என்று முஸ்லிம் சமூகத்தினர் கூறுகின்றார்கள்.

ஆனால் இது ஒரு பௌத்த நாடாகும். இங்கு சிங்களவர்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஒட்டுமொத்த நாட்டுக்கும் பொதுவான ஒரு சட்டமும் நிர்வாகமும் காணப்படவேண்டும். எம்மால் அரேபிய நாடொன்றுக்கு புத்தரின் சிலையை எடுத்துச்செல்லவோ, அதை அங்கு ஸ்தாபிக்கவோ முடியாது. ஆனால் எமது நாடு எந்தவொரு வைரஸையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகவே இருக்கின்றது. நான் இப்போது கொரோனா வைரஸை பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால் அதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையே ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிப் பீடமேற்றுவதற்கு முன்னின்று செயலாற்றியவர்கள் என்ற அடிப்படையில் தற்போது நிலவும் சர்ச்சையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற அடிப்படையில் சடலங்களைத் தகனம் செய்யும் கொள்கை தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டும். சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும்போது பிறிதொரு பிரிவினரால் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களுக்கு ஏற்றவாறு தீர்மானங்கள் எடுக்கப்படக்கூடாது.

எம்மாலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க முடியும். ஆனால் நாம் அதனைச் செய்யமாட்டோம். ஆகவே, இந்த விவகாரத்தில் அநாவசியமான சர்ச்சைகளை ஏற்படுத்த வேண்டாம் என்று இஸ்லாமிய மதத்தலைவர்களை வலியுறுத்துகின்றோம். இதற்கு அமைதியான தீர்வைக் காணவேண்டுமெனின், அரசாங்கத்தால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள கொள்கையை அனைவரும் அவ்வாறே பின்பற்ற வேண்டும்.

தற்போது குரல் எழுப்புகின்ற ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட எந்தவொரு முஸ்லிம் தலைவருமே, உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் இடம்பெற்றபோது அதற்கு எதிராகக் குரல் எழுப்பியவர்கள் அல்லர். எனவே அவர்கள் இவ்வாறு போராடுவார்களெனின், நாங்களும் வீதிகளில் இறங்கிப் போராடுவதற்கே தயாராக இருக்கின்றோம். நாங்கள் பௌத்த தர்மத்திற்கு ஏற்றவாறு அமைதியான முறையில் செயற்பட்டு வருகின்றோம். – என்றார்.

# கடலில் யுவதியின் சடலம் வெள்ளவத்தையில் சம்பவம்!

கொழும்பு–வெள்ளவத்தை கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையில் யுவதியொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கடந்த சனிக்கிழமை மதியம் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த 26 வயதான யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த யுவதியின் மரணத்துக்கான காரணம் தெரியாத போதும், அவர் கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அந்தப் பெண், வெள்ளவத்தை கரையோரப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகே வரை சிறிய ரகமோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்துள்ளார் எனவும், அங்கு மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கடல் பகுதியை நோக்கி சென்றார் எனவும் தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ள நிலையில், அவற்றை மையப்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அறுபது அடி பள்ளத்தில் பாய்ந்தது ஜீப் மயிரிழையில் உயிர் தப்பினார் சாரதி!

## தெமோதரையில் சம்பவம்

பண்டாரவளையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ஜீப் வாகனம் ஒன்று தெமோதரை நீர்தேக்கத்துக்கு அருகில் வீதியை விட்டு விலகி 60 அடி பள்ளத்தில் உள்ள ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த விபத்தில், சிறிது காயங்களுடன் ஜீப் வாகன சாரதி தப்பித்துள்ளார். விபத்து தொடர்பில், எல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் அதிக பனி மூட்டம் நிலவுவதால், வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு பதுளை பிரதான பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# சதொச தலைவர் பதவி விலகினார்!

வர்த்தகத்துறை அமைச்சின் கீழ் உள்ள லங்கா சதொச மற்றும் சதோச நிறுவனங்களின் தலைவராக செயற்பட்ட நுாட் பெரேரா, சதோச நிறுவன தலைவர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

வேலைப்பளுவின் காரணமாகவே இந்தத் தீர்மானத்தைத் தாம் எடுத்துள்ளார் என எழுத்து மூலமாக அவர் தெரிவித்துள்ளார். இவர், லங்கா சதொச சுபிரி சந்தைப்படுத்தல் வலையமைப்பின் கீழ் இயங்கிய நிறுவனங்கள் மற்றும் சதோச லொறி மற்றும் களஞ்சியப்படுத்தல் பிரிவின் தலைவராகப் பதவி வகித்துள்ளார்.

இதற்கமைய சதிச நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து கடந்த நவம்பர் மாதம் விலகியுள்ளார் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை சதொச நிறுவன தலைவர் பதவியில் இருந்து நுாட் பெரேராவை வர்த்தகத்துறை அமைச்சர் நீக்கியுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளன. இதற்கமைய சதொச தலைவர் பதவிக்கு வர்த்தகத்துறை அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது.

# போலி டொலர்களை அச்சிடுவதற்கு ஒத்தாசை வழங்கியவர் மாட்டினார்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



போலி டொலர்களை அச்சிடுவதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்கினார் எனக் கூறப்படும் நபரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கந்தளாய் மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் கைப்பற்றப்பட்ட டொலர்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளுக்கமைய, இந்த நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்கினார் எனக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி டொலர்களை அச்சிடுவதற்கு அவசியமான விசேட கடதாசி மற்றும் அச்சியந்திரம் என்பவற்றை சந்தேக நபர் மலேசியாவிலிருந்து நாட்டுக்கு எடுத்து வந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை அநுராதபுரம் பகுதியில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் அண்மையில் 100 டொலர்கள் பெறுமதியுடைய போலி நாணயத்தாள்கள் 327 கைப்பற்றப்பட்டிருந்தன. இதன்போது கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையுடன், இந்த போலி டொலர்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசி மற்றும் அச்சியந்திரத்தை நாட்டுக்கு எடுத்து வந்த நபர் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். அதற்கமையவே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு எதிராக போலி நாணயத்தாள் அச்சிடுவதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்கியமை தொடர்பிலும் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. மேற்படி விவகாரம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர் Kalaikkathir

## இவ்வளவு கொடுமைகளின் பின்னரும் கூட

# அமைதியாக வாழவே தமிழர்கள் விரும்புகின்றனர்!

**யாழ் பொது நூலக மாநாட்டு மண்டபம் நேற்று நடைபெற்ற 'அழிக்கப்படும் சாட்சியங்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

## நூல் வெளியீட்டு விழாவில் விக்கினேஸ்வரன் உரை

இன்றைய இந்த நூல் வெளியீட்டு விழா சற்று வித்தியாசமானது. எத்தனையோ புத்தக வெளியீடுகள், நூல் ஆய்வரங்குகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு அவ்வந்த நூல்களின் இலக்கியச்சுவைகள் பற்றியும், தமிழ் மொழி நடை பற்றியும், வட்டார வழக்குகள் பற்றியும், உலக நடப்புக்கள் பற்றியும், மதம், இலக்கியம், வரலாறு, சமூகவியல், சட்டம், அரசியல் பற்றி எல்லாம் பல விதமான உரைகளை உரையாற்றியிருக்கின்றோம்.

ஆனால் இன்றைய இந்த ஆவணக் கையேட்டை சற்று கனத்த மனத்துடன் – துக்கம் தொண்டையை அடைக்க – வெளியீடு செய்ய வேண்டிய ஓர் துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியிருக்கின்றோம். இந்த நூலில் ஆராய்வதற்கோ அல்லது விமர்சிப்பதற்கோ எந்த மொழி நடையோ இலக்கியச் சுவையோ ஆழமான கருத்துக்களோ இல்லை. மாறாக துன்ப வலிகளைச் சுமந்து கொண்டு நடைப்பிணங்களாக இங்கும் அங்கும் அலைந்து திரிந்து இறுதியில் மரணத்தைத் தழுவிக் கொண்ட எம்மிடையேயான ஒரு மக்கள் தொகுதியின் நினைவுகளும் புகைப்படங்களுமே இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன.

அறவழிக் கண்ணீர் போராட்டங்களின் போது கண்ணை மூடிய கணிசமான எம் மக்களின் நினைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆவணக் கையேட்டு வெளியீட்டு வைபவம் அவர்களுக்கான கண்ணீர் அஞ்சலியாகவே நடைபெறுகின்றது.

இந்த நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளைத் தொடர்ந்து பல்வேறுபட்ட இளைஞர்,யுவதிகள் வகைதொகையின்றி இராணுவப் படைகளாலும் புலனாய்வுப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவர்களைத் தேடி அலைந்த அவர்களின் பெற்றோர்கள், பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள் எனப் பலர் தமது இறுதி மூச்சுவரை மகனை அல்லது மகளை அல்லது சகோதர, சகோதரிகளை அல்லது உற்றவரை, உறவினரைத் தேடி அலைந்து, அவர்களுக்காக நீதிகோரிய போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு இறுதியில் நோய் வாய்ப்பட்டு இறப்பைத் தழுவிக் கொண்ட 74 பேரின் பதிவுகள் இந்த நூலில் காணப்படுகின்றன. ஏமாறிய நிலையில் இவ்வுலகை விட்டு ஏகியவர்களின் விவரக்கோவையே இன்று வெளியிடப்படும் நூல்.

பண்டைய தமிழ் மக்களின் வரலாறுகள், அவர்களின் இருப்புக்கள், பாரம்பரியங்கள் என்பன நூல் வடிவிலோ, ஓலைச் சுவடிகளிலோ அல்லது கற்களில் வடித்தோ முறையாக பேணப்படாமையால் இன்று எமது சரித்திர வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டு வருகின்றன. தினம் தினம் மாற்றி எழுதப்பட்டு வருகின்றன. பெரும்பான்மை மக்களின் சாசனங்கள் வாயிலாக வரலாறுகள் தமிழர்க்கு எதிராகத் திரிக்கப்பட்டு எழுதப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாது இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாகிய 3,000 வருடங்கள் பழைமை வாய்ந்த தமிழர்களின் வரலாறுகள் நீக்கப்பட்டு கிறீஸ்துவுக்குப் பின் 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டளவில் வழக்கிற்கு வந்த சிங்கள மொழி பேசுவோரே இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் எனவும் தமிழ் மக்கள் அதன் பின்னைய காலங்களில் குடியேறிய மக்கள் எனவும் சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இனப்படுகொலையின் ஒரு அம்சமாகவே இதனை நாம் பார்க்க வேண்டியுள்ளது.

> "இன்றும் நாம் அதையே நினைவுகூர விரும்புகின் றோம். சிங்கள மக்களை நாம் என்றும் எமது விரோதிகளாகக் கருதவில்லை. மாறாக எமது பகுதிகளில் எம்மை நாமே ஆளக்கூடிய வகையிலான ஒரு கூட்டுச் சமஷ்டி முறையிலான தீர்வையே நாம் விரும்புகின் றோம்."

உலக சனத்தொகையில் தமிழர்களை விடக் குறைந்த அளவில் உள்ள சிங்கள மக்கள் ஓரளவிற்கு செறிந்து வாழுகின்ற இந்த நாட்டில், தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிமையைக் கொடுத்துவிட்டால் சிங்கள மக்களுக்கு இருக்க நாடு இல்லாமல் போய்விடும், அவர்களுக்கு என்று ஒரு தேசம் இல்லாமல் போய்விடும் எனப் பயப்படுகின்றார்கள் சிங்கள அரசியல்வாதிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும். இலங்கைத் தீவை விட சிறிய நாடாகிய சிங்கப்பூரில் பல மொழிகளைப் பேசுகின்ற



பல் இன மக்கள் வாழுகின்ற போதும் அந்த நாட்டில் மொழி வேறுபாடு இல்லை, மத வேறுபாடு இல்லை, ஆனால் அங்கு சுபீட்சம் நிலவுகின்றது, நாடும் வளம் பெற்று வளர்ந்து வருகின்றது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

ஆனால் எமது நாட்டில் இரண்டு பிரிவினர்களுக்கிடையே தான் பிரச்சினை வலுவடைந்துள்ளது. நிலவுகின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது ஒரு காரியமே அல்ல. எனினும் தமிழ் மக்களுக்கு எதனையும் கொடுத்துவிடக்கூடாது என்ற மனப்பாங்குடன் செயற்படும் சிங்களத் தலைவர்களின் பிழையான வழிகாட்டல்களே தமிழ் மக்கள் மீது பல விதமான ஒடுக்குமுறைகள் தலைவிரித்தாடக் காரணமாக இருந்து வந்துள்ளன.

யுத்தம் நிறைவு பெற்ற 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்திடம் தமது கணவரை முறையாக கையளித்த பெண்கள், பிள்ளைகளை கையளித்த தாய்மார்கள், சகோதரங்களைக் கையளித்த சகோதரர்கள் மற்றும் உற்றார்,உறவினர்கள் போன்றோரை – கையளித்தவர்களை இழிவுபடுத்தும் விதத்தில் – அவ்வாறான கையளிப்புக்கள் எதுவும் நடக்கவில்லை, அவ்வாறான எந்தவொரு அரசியல் கைதிகளும் தம்மிடம் இல்லை எனக் கூறி இப்போது மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. அது சம்பந்தமான விசாரணையை நடத்த வேண்டும் என்று உலக நாடுகள் கேட்டுவரினும் அக்கோரிக்கைகளுக்கு இணங்காது தான்தோன்றித்தனமாக இலங்கை அரசாங்கம் நடந்து வருகின்றது.



அதுபோலவே இன்றைய கை நூலில் ஆவணப்படுத்தப்படும் வரலாற்றுப் பதிவுகள் தொடர்ந்து எம் கைகளில் கிட்டாமல் போனால் இன்னும் சற்றுக் காலம் செல்ல இந்த நிகழ்வுகள் எல்லாம் பொய்யாகப் புனையப்பட்டவை என ஜெனி வாவிலும் உலக அரங்கிலும் கூறத் தொடங்கிவிடுவார்கள். ஆகவே தான் மரணித்தோரின் பதிவுகள் இந்நூலின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு வருங்கால நிரூபணங்களாக பதியப்பட்டுள்ளன.

எனவே எமது வரலாறுகள் நன்மையானவையோ தீமையானவையோ அவை அனைத்தும் ஆவ. மயப்படுத்தப்பட வேண்டும் என்பது அத்தியாவசியமாகின்றது. முன்னர் தான் நாம் எமது சரித்திரங்களை எழுதி வைக்கவில்லை. தொடர்ந்தும் அவ்வாறு வாளாதிருப்பது எமக்கு பலத்த பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வளவு கோரக் கொடுமைகளின் பின்பும் தமிழ் மக்கள் அமைதியாக இங்கு இருந்து வருவது பிறநாட்டவர்க்கு வியப்பை அளித்தாலும் ஏதோ ஒரு விடிவு காலம் அண்மையில் வரப் போகின்றது என்ற எண்ணமே எம் மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்து எம்மை ஓட்டி வருகின்றது.

காலத்திற்குக் காலம் மாற்றங்கள் ஏற்படுவதே மனித வாழ்க்கை. தொடர்ந்து கஷ்டத்தையே எம் மக்கள் அனுபவித்து வரவேண்டிய அவசியமில்லை. விடிவு விரைவில் வரும் என நம்புவோம்.

தமிழ் மக்கள் என்றுமே சிங்கள மக்களை அடக்கி ஆளவோ அல்லது அவர்கள் மீது வன்முறையைப் பிரயோகிக்கவோ விரும்பவில்லை. மாறாக தாம் வாழுகின்ற பகுதிகளில் தம் மக்கள் சுபீட்சத்துடன் வாழ தம்மைத் தாமே ஆளக்கூடிய வகையிலான ஓர் ஆட்சி முறைமையையே விரும்புகின்றார்கள். இதை சர்வ தேசச் சட்டம் அங்கீகரிக்கின்றது. ஆனால் பேரினவாதிகளோ இந்த நாடு முற்றுமுழுதாக சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமான ஒரு சிங்கள பௌத்த தேசம் எனவும், சிறுபான்மை மக்கள் தாம் போடுகின்ற பொரியை உண்டு விட்டு கைகட்டி வாய் பொத்தி தங்களுக்கு சேவகம் செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றார்கள். அதன் விளைவே சில காலங்களுக்கு முன்பு அவர்கள் அனுபவித்த துன்பங்களுக்கான மூலாதாரங்கள்.

எம் மக்கள் ஏற்கனவே முப்பது ஆண்டுகளுக்கு மேலாக துன்பச் சுமைகளைச் சுமந்து பழக்கப்பட்டவர்கள். அவர்களின் எந்த அழுத்தங்களையோ அல்லது அவர் தரும் துன்பங்களையோ கண்டு எம்மவர் துவண்டுவிடமாட்டார்கள். ஒரு நாள் பேரழிவையே தாங்க மாட்டாத இந்தப் பேரினவாதிகளுக்கு அடி மழை, வெள்ளங்கள் ஏற்பட்ட காலத்தில் முதலாவது உதவி, அக்காலத்தில் தமிழினத்தின் தலைவிதியைத் தீர்மானித்த தலைவர்களிடமிருந்தே, எடுத்துச் செல்லப்பட்டது என்பது வரலாற்று உண்மை. மாத்தறையில் உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக் கொண்ட பௌத்த பிக்குமார்கள் வெளிப்படையாக இயக்கங்களிற்கு நன்றி தெரிவித்தார்கள்.

இன்றும் நாம் அதையே நினைவுகூர விரும்புகின்றோம். சிங்கள மக்களை நாம் என்றும் எமது விரோதிகளாகக் கருதவில்லை. மாறாக எமது பகுதிகளில் எம்மை நாமே ஆளக்கூடிய வகையிலான ஒரு கூட்டுச் சமஷ்டி முறையிலான தீர்வையே நாம் விரும்புகின்றோம். காரணம் ஒற்றையாட்சிக்குக் கீழ் பெரும்பான்மையினரின் ஆதிக்க வெறியாட்டம் இதுவரையில் நாம் அறிந்த உண்மையே. சமஷ்டி என்கின்ற ஒரு சொல்லைக் கேட்டவுடனேயே நாக பாம்பை மிதித்துவிட்டவர்கள் போல சிங்கள அரசியல்வாதிகள் துள்ளிக் குதிக்கின்றார்கள். நாட்டைக் கூறு போடப் போகின்றோம் என்று கூச்சலிடுகின்றார்கள்; ஓலமிடுகின்றார்கள். உண்மை நிலையை விளங்கிக் கொள்ளாத சிங்கள மக்களும் அதனை நம்பி தமிழ் மக்கள் மீது வன்முறையில் ஈடு பட எத்தனிக்கின்றார்கள்.

சிங்களக் குடிமக்களை பழகுவதற்கு இனியவர்கள். பண்பானவர்கள். ஆனால் இனம் என்று வருகின்ற போது சுயநலம் மிகுந்த அரசியல் தலைவர்களின் வன்முறை அரசியல் கலாச்சாரத்தின் தூண்டலில் இவர்கள் வன்முறையாளர்களாக மாறுகின்றார்கள். உடமைகள் அழிக்கப்படுகின்றன. உயிர்கள் அழிக்கப்படுகின்றன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இவ்வாறாக இன்னோரன்ன துன்பங்களைத் தமிழ் மக்களுக்குப்புரிவதற்கு அவர்கள்தூண்டிவிடப்படுகின்றார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

சார்வரி வருடம் மார்கழி மாதம் 12ஆம் திகதி நேற்று (டிசெம்பர் 27) 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு வாக்கியப் பஞ்சாங்கப்படி இடப்பெயர்ச்சி அடைந்தார்.
இதன்படி 12 இராசிக்காரர்களுக்கு சனிப்பெயர்ச்சிப் பலன்கள் வருமாறு:–



# சனி பெயர்ச்சி 2020 - 2023

**மேஷம்:-**

காலபுருஷனின் முதல் ராசியாகிய மேஷ ராசியை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! இந்த சனி பெயர்ச்சியில் சனி பகவான் உங்கள் ராசிக்கு பத்தாம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். சிறு சிறு கஷ்டங்கள் வந்தாலும் அதிலிருந்து நீங்கள் மீண்டு விடுவீர்கள். பண வரவு குறைவாக இருந்தாலும் பற்றாக் குறை இருக்க வாய்ப்பிலை. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. நீண்ட நாள்களாக வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். ஆனால் நீங்கள் கடு மையாக உழைக்க வேண்டியிருக் கும். கவனமும் மிகவும் அவசியம். பணியில் இருப்பவர் கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் கவ னமாக நடந்து கொள்ள வேண்டும். கொஞ்சம் அலட் சியப்போக்கு இருந்தாலும் பிரச்சினையில் சிக்கிக் கொள் வீர்கள். சுய தொழில் செய்பவர்கள் தங்கள் கடின உழைப் பின் மூலம் நல்ல பலன்களைக் காண இயலும். உங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாக்கில் நிதா னம் தேவை. மாணவர்கள் வீண் செலவுகளை தவிர்க்க வேண்டும். சக மாணவர்களுடன் கவனமாகப் பழகுங் கள். தீய நட்புகளில் இருந்து விலகி விடுங்கள். படிப்பில் முழு கவனம் செலுத்தினால் மட்டும் தான் நீங்கள் வெற்றி இலக்கை அடைய இயலும். திருமணம் குறித்த முடிவு களை நிதானமாக அவசரப்படாமல் எடுக்க வேண்டும். விவசாயத் துறையிலிருப்பவர்கள் மேன்மை அடைவார் கள்.

**ரிஷபம்:-**

சுக்கிரனின் ஆட்சி வீடாகிய ரிஷபத்தை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! இதுவரை நீங்கள் சந்தித்து வந்த கஷ்டங்கள் யாவும் விலகும் காலம் வந்து விட்டது. உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தான அதிபதி பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்ய விருக்கிறார். குடும்பத்தில் அமைதி நிலவும். சுபநிகழ்ச்சி கள் நடக்கும். உங்கள் பிள்ளைகள் மூலம் நீங்கள் பெருமை அடைவீர்கள். வேலை தேடுபவர்களுக்கு நீங்களே ஆச்சரியப்படும் அளவிற்கு நல்ல வேலை கிடைக்கும். உங்கள் கடின உழைப்பு மூலம் அந்த வேலையை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். பணியிடத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அலுவலகத்தில் ஊதிய உயர்வு பதவி உயர்வு போன்றவை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. தொழில் செய்பவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்பு கிட்டும். மாணவர்களின் ஞாபகத் திறன் அதிகரிக்கும். உயர் கல்வி படிக்க விரும்பும் மாண வர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறக் காண்பார்கள். வெளி நாடு செல்ல விரும்பும் மாணவர்கள் பாஸ்போர்ட் விசா போன்றவற்றில் கவனமாக இருக்க வேண்டும். கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்து விளங்குவார்கள்.

**மிதுனம்:-**

உபய ராசியான மிதுனத்தை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! உங்கள் ராசிக்கு ஏழில் சஞ்சரித்த சனி பகவான் இந்தப் பெயர்ச்சியில் அஷ்டம ஸ்தானம் என்னும் எட்டாம் இடத் தில் சஞ்சரிக்கவிருக்கிறார். கஷ்ட காலம் முழுமையாக நீங்காமல் பனிமூட்டம் போல உங்களை சுற்றி இருக்கும் என்றாலும் உங்களுக்கு இருந்து வந்த அவப் பெயர் நீங்கும். பிரச்சினைகள் சற்று குறையும். குடும்பம், வேலை, தொழில் என அனைத் திலும் நீங்கள் சில பிரச்சினை களை சந்திக்க வேண்டியிருக்கும். உங்கள் பேச்சு தான் உங்கள் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அமை யும் என்பதால் உங்கள் பேச்சில் அதிக கவனம் தேவை. யாரிடமும் வாக்கு வாதம் செய்யாதீர்கள். குழந்தைகள் வியத்தில் கவனமாக இருங்கள். கணவன் மனைவி உறவில் சில பிரச்சினைகள் தலை தூக்கும். நிதானம் தேவை. வேலையில் இருப்பவர்கள் மற்றும் தொழில் செய்பவர்கள் கவனமாகச் செயல்பட வேண்டும். மாண வர்களுக்கு மந்த நிலை இருக்கும். ஞாபக சக்தி குறையும். கவனம் சிதறாமல் படிக்கவேண்டும்.

**கடகம்:-**

காலபுருஷனுக்கு நான்காம் ராசியாக விளங்கும் கடக ராசியை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! உங்கள் ராசிக்கு ஏழுக்கும் எட்டுக்கும் அதிபதியாக விளங்கும் சனி பக வான் இந்த பெயர்ச்சியில் உங்கள் ராசிக்கு ஏழாம் வீட் டில் சஞ்சரிக்கப் போகிறார். சற்று சங்கடங்களையும் தரத்தான் போகிறார். எதிலும் நேர்மையாகச் செயல்படுங் கள். புயலுக்குப் பின் அமைதி என்பதுபோல சங்கடங்க ளுக்குப் பிறகு நீங்கள் சாதனைகளையும் படைக்க முடி யும் கணவன் மனைவி பிரச்சினை தலை தூக்கும். கவனமுடன் நடந்து கொள்ளுங்கள். நல்ல நண்பர்கள் சகவாசம் தேடி அமைத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. அவப் பெயர் கூட ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே உங்கள் பேச்சில் நிதானம் தேவை. மாணவர்கள் கவனமுடன் படிக்க வேண்டும். யாரிடமும் கடன் வாங்காதீர்கள். தொழில் செய்பவர்கள் குறிப்பாக கூட்டுத் தொழில் செய்பவர்கள் நிதானமாக சிந்தித்துச் செயல்பட வேண்டும். திருமணத்திற்கு காத்தி ருப்பவர்கள் இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருக்க வேண்டும்

**சிம்மம்:-**

சிம்ம ராசி அன்பர்களே! சிங்கம் போல கர்ஜிக்கும் சிறப்பான நேரமாகத் தான் இந்த சனிபெயர்ச்சி உங்களுக்கு அமையப் போகின் றது. ஆறில் சஞ்சரிக்கும் சனி பகவான் உங்க ளுக்கு அதிர்ஷ்டத்தை வழங்கப் போகிறார் என்றாலும் நீங்கள் சிவ வழிபாடு மேற்கொள்வது நல்லது. உங்கள் செல்வாக்கு கூடும். மதிப்பும் மரியாதையும் கூடும். உங் கள் வாக்கிற்கு மதிப்பு இருக்கும். குடும்பத்தில் சந் தோஷ மும் மகிழ்ச்சியும் பொங்கும். கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும். ஒற்றுமை பிறக்கும். ஒருவருக்கொ ருவர் அன்னியோன்யமாகப் பழகும் காலக் கட்டமாக இந்த பெயர்ச்சிக் காலம் அமையும். நீங்கள் வேலைதேடிக் கொண்டிருப்பவர் என்றால் உங்க ளுக்கு நல்ல வேலை கிடைக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் எதிர்பாராத முன்னேற்றம் காண்பார்கள். உங்கள் உடல் ஆரோக்கி யத்தில் கவனம் அவசியம். அரசியலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களில், குறிப்பாக இரவு நேரப் பயணங்களில் கவனம் தேவை. இரவு நேர பயணத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு இந்த பெயர்சிக் காலம் மிகவும் சாதகமான காலம் ஆகும். தேர்வில் நல்ல மதிப் பெண்களைப் பெற்று உயர் கல்வியை விருப்பம் போல படிப்பீர்கள். திருமண முயற்சிகள் சிறிய தடங்கலுடன் வெற்றியைஅளிக்கும்.

**கன்னி:-**

கால புருஷ ராசிக்கு ஆறாவது ராசியாக விளங்கும் கன்னி ராசியை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று கூறப்படும் ஐந்தாம் ராசியாகிய மகரத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை உங்கள் சுக போக வாழ்வில் பல சங்கடங்களை அளித்த சனி பகவான் தற்பொழுது உங் கள் சங்கடங்களை தீர்த்து சந்தோத்தை தரவிருக்கிறார். நீங்கள் வாழ்வில் ஏற்றம் பெறப் போகிறீர்கள். என்றாலும் நீங்கள் சில சிக்கல்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக் கும். வேலையில் இருப்பவர்கள் கவனமாக இருக்க வேண்டிய காலம். குழந்தைப் பேறு வேண்டுபவர்க ளுக்கு குழந்தைப் பேறு கிட்டும். உடல் நலத்தில் கவனம் தேவை. மாணவர்கள் சோம்பலை விட்டொழித்து சுறு சுறுப்பாக இருக்க முயல வேண்டும். திருமணத் தடைகள் நீங்கி திருமணம் நடக்கும். மாணவர்கள் கவனத்தை சிதற விடாமல் படிக்க வேண்டும்.

**துலாம்:-**

தராசைக் குறியாகக் கொண்ட துலாம் ராசியை ஜென்ம ராசியாகக் கொண்ட அன் பர்களே! உங்கள் ராசிக்கு நான்காம் இடமா கிய கேந்திர ஸ்தானத்தில் சனி பெயர்ச்சி ஆகி றார். எனவே உங்கள் தாயார் உடல் நலத்தில் கவனம் தேவை. உங்கள் உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. சிறிய உடல் உபாதை என்றாலும் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்வது கொள்வது நல்லது. உங்கள் மனதில் மந்த நிலை இருக்கும். நீங்கள் சோம்பலை தவிர்க்க முயற்சி எடுக்க வேண்டும். வண்டி வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை. வேலை தேடுப வர்கள் கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வேலையில் இருப்பவர்கள் பணியிடத்தில் பிரச்சினைகள் இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு வேலையை விடாமல் பணியாற்ற வேண்டும். தொழில் செய்பவர்கள் தங்கள் தொழிலில் முன்னேறுவார்கள். பகைவர்கள் விலகுவார்கள். வெற்றி பெற இயலும். மாணவர்கள் கவ னமாகப் படித்தால் தான் படிப்பில் வெற்றி காண முடி யும். திருமணத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கும்.

**விருச்சிகம்:-**

கால புருஷனின் எட்டாவது ராசியாகிய விருச்சிகத்தை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! உங்கள் ராசிக்கு மூன்றாம் வீட்டில், அதாவது தனது சொந்த வீடாகிய மகர ராசியில் சஞ்ச ரிக்கும் சனி பகவான் உங்களுக்கு தைரியத்தை அளிப்பார். உங்கள் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் மூலம் நன்மை கிட்டும். கணிசமான பண வரவு இருக்கும். ஆனால் செலவுகளை கட்டுபடுத்த வேண் டும். கடன் கொடுப்பதும் வாங்குவதும் கூடாது. குடும்பத்தில் குதூகலம் இருக்கும். வேலை தேடுபவர்களுக்கு இது நாள் வரை வேலை இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தவர் களுக்கு நிச்சயம் நல்ல வேலை கிடைக்கும். வேலையில் முன்னேற்றம் கிட்டும். பதவி உயர்வு ஊதிய உயர்வு கிட் டும். உடன் வேலை செய்பவர்களிடம் அனாவசியமாக எந்த வாக்குவாதத்திலும் ஈடுபட வேண்டாம். தொழில் செய்வார்கள் சிறப்பாக செயலாற்றுவார்கள். தொழிலை விரிவு படுத்த எண்ணுபவர்களின் எண்ணம் நிறைவே றும். மாணவர்களுக்கு ஞாபக மறதி ஏற்படும் என்பதால் கவனமாகப் படிக்க வேண்டும். திருமணத்திற்குக் காத்தி ருப்பவர்களுக்கு திருமணம் நடக்கும்.

**தனுசு:-**

தனுசு ராசி அன்பர்களே! இதுவரை உங் கள் ஜென்ம ராசியில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இந்த பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் சஞ்சரிக்க விருக்கி றார். இரண்டாம் வீடு என்பது உங்கள் பணம் மற்றும் குடும்பத்தைக் குறிக்கும். உங்கள் ராசிக்கு இரண்டு மற் றும் மூன்றாம் வீட்டின் அதிபதியான சனி பகவான், தனது சொந்த மற்றும் ஆட்சி வீடாகிய மகர ராசியில் சஞ்சரிப்ப தால் உங்கள் மனதில் தன்னம்பிக்கை பெருகும். பண வரவு சீராக இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் ஆத ரவு இருக்கும். இளைய உடன் பிறப்புகளின் வாழ்வில் முன்னேற்றம் கிட்டும். மனதில் தைரியம் கூடும். இதுவரை நீங்கள் சந்தித்து வந்த தடைகளை எல்லாம் நீக்கும் தைரியம் உங்கள் மனதில் உருவாகும். சனி பகவான் அருளால் இதுவரை நீங்கள் சந்தித்து வந்த துன்பங்கள், குடும்ப குழப்பங்கள், சஞ்சலங்கள், பொருளாதார வீழ்ச்சி, பிரச்சினைகள் நீங்கி மனதில் நிம்மதி பெருகும். தொழில் செய்பவர்கள் பொருளாதார சீர்குலைவு நீங்கினாலும் சற்று கவனமாகவும் பொறுமையாகவும் இருக்க வேண் டும். பயணங்கள் மூலம் ஆதா யம் பெறுவீர்கள். உத்தி யோகம் செய்யும் இடத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வி யில் சிறந்து விளங்கு வார்கள். திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு திரு மணம் கைகூடும்

**மகரம்:-**

சனி பகவான் ஆட்சி வீடாக இருக்கும் மகர ராசியை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர் களே! உங்கள் ராசியிலேயே சனி பகவான் சஞ்சரிப்பதால் இந்தக் காலக் கட்டம் உங்க ளுக்கு ஜென்மச் சனி காலம் ஆகும். எனவே உங்கள் மனதில் தன்னம்பிக்கை மற்றும் தைரியம் குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் வரும். கணவன் மனைவி

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# வயதெல்லை பூர்த்தியாகாதவர்களுக்கு வாகனம் வழங்கினால் சட்டநடவடிக்கை!

## எச்சரிக்கிறார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, டிசெ.28

சாரதி அனுமதி பத்திரம் இல்லாத மற்றும் உரிய வயதெல்லையைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கு வாகனங்களை ஓட்டுவதற்கு அனுமதி வழங்கும் நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதன்போது, குற்றம் நிரூபிக்கப்படும் நபர்களுக்கு சிறைத்தண்டனை அல்லது 25 ஆயிரம் ரூபா வரை அபராதம் அறவிடுவதற்கும் அனுமதி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகளுக்கமைய, 18 வயதிற்கும் குறைந்த சிறுவர்களுக்கும், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத நபர்களுக்கும் அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் எனப் பலர் தங்களது வாகனங்களை ஓட்டுவதற்கு அனுமதி வழங்கி வருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இவர்கள் விநோதமான முறையிலேயே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது. ஆனால் இது குற்றச்செயற்பாடாகும். அதனால் இவ்வாறு வாகனங்களை ஓட்டும் நபர்களுக்கு எதிராகவும், அவர்களுக் கான வாகனங்களை வழங்கி வரும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த சோதனை நடவடிக்கைகளின் போது சாரதி அனுமதி பத்திரம் இல்லாமல், உரிய வயது எல்லையை பூர்த்தி செய்யாமல் வாகனங்களை செலுத்திய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற நபர்களுக்கும் வாகனங்களை வழங்கிய நபர்களுக்கும் எதிராக சட்டநடவடிக்கை எடுத்து அவர்களுக்கு சிறைத்தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் அல்லது 25 ஆயிரம் ரூபா வரை அபராதம் அறவிடவும் அனுமதி உள்ளது.

அதனால் இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். - என்றார்.

# யாழ். மாநகர முதல்வர் தெரிவு: எமது ஆதரவு சரியான நேரத்தில்!

## தெரிவிக்கப்படும் என்கிறார் டக்ளஸ்



யாழ்ப்பாணம், டிசெ.28

அனைவருடனும் பேச்சுநடத்துகின்றோம். யாருக்கு ஆதரவு என இன்னும் தீர்மானிக்கவில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

30ஆம் திகதி இடம்பெறவுள்ள நல்லூர் பிரதேச சபை மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் தெரிவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாருக்கு ஆதரவை வழங்கவுள்ளது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் எழுத்து மூலமான எந்த கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. எனினும் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் நாங்கள் அனைவருடனும் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

நல்லூர் பிரதேச சபையில் ரெலோவிற்கு ஆதரவு வழங்கப் போகின்றோம் என்ற விடயத்திலும் எந்த உண்மையுமில்லை. எனினும் நாம் அனைவருடனும் பேச்சில் ஈடுபடுகின்றோம். தகுந்த நேரத்தில் முடிவு அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.




**கொரோனா வைரஸ் உள்ள ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால், அவருடன் நீங்கள் கடைசியாகத் தொடர்புகொண்ட நாளுக்குப் பின்னர் 14 நாள்களுக்கு உங்களின் வீடு அல்லது பிற தங்குமிடங்களில் உங்களுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.**



**தொற்றுநோயாக இருந்தபோது பரிசோதித்து கொரோனா வைரஸ் நேர்மறையாக உள்ள ஒருவருடன் நீங்கள் 15 நிமிடங்களுக்கும் மேலாக நேருக்கு நேர் தொடர்பு கொண்டிருந்தால் அல்லது இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக மூடப்பட்ட இடத்தில் இருந்திருந்தால், நீங்கள் ஒரு நெருங்கிய தொடர்புடையவர் ஆவீர்கள்.**

**ஒரே வீட்டில் வசித்தல் அல்லது ஒரே பணியிடத்தில் வேலை செய்தல் போன்ற பல வழிகளிலும் நெருங்கிய தொடர்பு ஏற்படலாம்.**

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**




# வவுனியாவில் ஜனாஸா எரிப்புக்கு எதிராக வெள்ளைத்துணி கவனவீர்ப்புப் போராட்டம்!

முஸ்லீம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிராக வெள்ளைத்துணி கட்டும், கவன வீர்ப்பு போராட்டமொன்று வவுனியாவில் கடந்த (சனிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

வவுனியா மன்னார் பிரதான வீதி பட்டாணிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அனைத்து பள்ளிவாசல்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம், சுனாமி பேரவையில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியமையின் பின்னர் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பேணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'அடக்கம் என்பதே உலக நியதி; எரிப்போம் என்பதே உன் வியாதி', 'எரிக்காதே, எரிக்காதே, ஜனாஸாக்களை எரிக்காதே', 'மண்ணை விட மருத்துவம் எதுவுண்டு' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கி இருந்தமையுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமத்



மௌலவி, வவுனியா நகரசபை உறுப்பினர்களான ரசூல் லறீப், அப்பதுல் பாரி, பாயிஸ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மௌலவிமார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தனிமைப்படுத்தல் விதியை மீறிய 1,700 பேருக்கு எதிராக வழக்கு!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாகச் செயற்பட்ட 1,700 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாக செயற்படும் நபர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் சனி காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 1,829 பேர் வரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 1,700 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக சுகாதாரப் பிரிவினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களது ஆலோசனைக்கமைய அனைவரும் செயற்பட வேண்டும். தற்போது மேல்மாகாணத்திலிருந்து வெளியேறுவதற்காக பயன்படுத்தப்படும் பகுதிகளில் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

வைரஸ் பரவல் காரணமாக சில கிராமசேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த பகுதிகளில் வசிப்பவர்கள் சுகாதார பிரிவின் அறிவுறுத்தல்க



ளைக் கடைப்பிடிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது. குறிப்பாக பி.சீ.ஆர் பரிசோதனைகளுக்கு சமுகமளிக்குமாறும் ஏனைய சுகாதார சட்டவிதிகளைப் பின்பற்றுமாறும் சுகாதார தரப்பினால் வழங்கப்படும் ஆலோசனைகளை அவர்கள் கடைப்பிடிப்பதில்லை என்றும் தெரியவந்துள்ளது. இதுபோன்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்நிலையில் அட்டலுகம பகுதியில் இவ்வாறு ஒத்துழைப்பு வழங்காத பலருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுகாதார பிரிவினரின் செயற்பாடுகளின் போது, மக்களது விவரங்களைத் தங்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டால், அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உண்மையான தகவல்களை மாத்திரமே அவர்களுக்கு வழங்கவேண்டும். இந்த செயற்பாடுகளின் போது போலித்தகவல்களை எவரேனும் வழங்குகின்றார்களா என்பது தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர். மேலும் இந்த சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயற்படும் நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# கொரோனாவால் சனியன்று ஐந்து கைதிகள் சாவடைவு!

கொரோனா தொற்று உறுதியான மேலும் ஐந்து சிறை கைதிகள் உயிரிழந்துள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகிய 639 கைதிகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேலும் ஒன்பது சிறைச்சாலை அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

# கொரோனா குணமடைவு 32 ஆயிரத்தைக் கடந்தது

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 32 ஆயிரத்து 51 ஆக உயர்ந்துள்ளது.

24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 712 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 39 ஆயிரத்து 782 ஆக காணப்படுகின்றது.

இதில் 7 ஆயிரத்து 545 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 432 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 186 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி நில அதிர்வு தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் தாக்கல்

அண்மையில் கண்டியின் திகண பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பான நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

அறிக்கையை, சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை விக்டோரியா அணைக்கு அருகிலுள்ள சமீபத்திய நிலநடுக்கம் தொடர்பான இடைக்கால அறிக்கை அடுத்த வாரம் ஒப்படைக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டியின் திகணவில் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சிறிய நடுக்கம் தொடர்பாக ஆராய 11 பேர் கொண்ட சிறப்புக் குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாடளாவிய ரீதியில் 36 குற்றக் குழுக்கள்: நடவடிக்கை எடுக்க சரத் வீரசேகர பணிப்பு

நாடளாவிய ரீதியில் 36 குற்றக் குழுக்கள் உள்ளன எனவும் பொலிஸார், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுடன், அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின் போது, பொலிஸார் இதனை அறிவித்துள்ளமையுடன், அந்தக் குழுக்களில் 24 குழுக்கள் தற்போதும் செயற்பாட்டு நிலையில் உள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த குற்றக் குழுக்களில் பலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளமை தொடர்பிலும் இதன்போது அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் அனைத்து திட்டமிடப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் இவ்வாறான குற்றக் குழுக்களை ஒடுக்க போதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸாருக்கு இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

# அன்டிஜென் பரிசோதனையில் இதுவரை 49 பேருக்கு தொற்று!

மேல்மாகாணத்திலிருந்துவெளியேறும் பயணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், இதுவரை 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்திலிருந்துவெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் அன்டிஜென் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி கடந்த டிசெம்பர் 18 முதல் இதுவரை 8 ஆயிரம் விரைவான அன்டிஜென் சோதனைகள் நடத்தப்பட்டன என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்திலிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்குத் தொற்று பரவாமல் தடுப்பதற்காக முன்னெடுக் கப்பட்ட இந்தச் சோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மேல் மாகாண ஆசிரியர்களின் வெற்றிடம் நிரப்ப வர்த்தமானி!

## ஆளுநர் தெரிவிப்பு



மேல் மாகாணத்தில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆள்சேர்ப்புக்கான நடைமுறை தொடர்பாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என்று மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆட்சேர்ப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை தொடர்ந்து புதிய நியமனங்கள் வழங்கப்படும் என மேல் மாகாண ஆளுநர் ரொான் குணதிலக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஆசிரியர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனக் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் அனைத்து பாடங்களிலும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகம் உள்ளன என்றும் மேல் மாகாண ஆளுநர் ரொான் குணதிலக தெரிவித்துள்ளார்.

# வலுவான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றினுள் இலங்கையை வைத்திருப்பதற்கான பிரேரணை தேவை

## ஐ.நா. வதிவிட பிரதிநிதியிடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,டிசெ.28

இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக் கூறல் பொறிமுறைக்குள் வைத்திருக்கும் வகையில் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணை வலுவானதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழர்களாகிய நாங்கள் இலங்கை அரசால் இனப்படுகொலை செய்யப்பட்ட பின்னர், கடந்த பத்து ஆண்டுகளாக நீதியை எதிர்பார்த்துப் போராடிக்கொண்டிருக்கின்றோம் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

பாதிக்கப்பட்ட தரப்பான நாம் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் முன்மொழியப்பட்ட பொறிமுறைகளின் ஊடாக நீதியான விசாரணை நடைபெறும் என்று பெரு நம்பிக்கை கொண்டிருந்தோம்.

உள்நாட்டில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் உள்ளிட்ட முன்னேற்றகரமான விடயங்கள் நடைமுறைச்சாத்தியமாகும் என்று எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 30/1 பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு அதில் முன்மொழியப்பட்ட விடயங்களை



இலங்கைஅரசாங்கம்தனது இறைமையை காரணம் காட்டி நிராகரித்து விட்டது.

இதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ் மக்கள் எதிர்பார்த்த பொறுப்புக்கூறும் செயன்முறை தேக்க நிலையிலேயே உள்ளது.

வடக்கு கிழக்கை பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழினம் சிங்கள இனத்தின் பூர்வீகத்தை விடவும் நெடிய வரலாற்றைக் கொண்டது. அத்துடன் தமிழினம் தனித்துவ கலாசார, பண்பாடுகளையும், இறைமையையும் கொண்டதாகும்.

2010 இல் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதி, இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட கற்றுத்தந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்ட மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1, 34/1, 40/1 தீர்மானங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் தற்போது ஆட்சியில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முழுமையாக நிராகரித்துள்ளது.

இவ்வாறான நிலையில் புதிய அரசியல் சாசன உருவாக்கம் மற்றும் இதர சில பொருளாதார விடயங்களை மையப்படுத்தி உள்ளகத்தில் தமிழர்கள் உட்பட சிறுபான்மைத் தேசிய இனங்களை அடிமைப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுக்கும் ஏக காலத்தில் சர்வதேசத்துக்கு அவை தொடர்பாக வேறொரு பிம்பத்தை காண்பிப்பதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதை தாங்கள் அறியாதவர் அல்லர்.

இந்நிலையிலிருந்து தமிழர்களைக் காப்பாற்ற ஐக்கிய நாடுகள் சபையில் மட்டுமே முடியும் என்பது ஒட்டுமொத்த தமிழர்களினதும் ஏகோபித்த நம்பிக்கை ஆகும்.

அதனடிப்படையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவதுகூட்டத்தொடரில் பொறுப்புக்கூறலை மறுதலித்து வரும் இலங்கை அரசாங்கம் தொடர்பில் புதிய பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ளதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிஸ் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சரா ஹல்டன் ஆகியோர் திடமாகத் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கூற்றுக்கள் எமக்கு நம்பிக்கை அளிக்கும் அதேசமயம், தாங்கள் இலங்கையின் சமகால நிலைமைகளையும் இனவழிப்பின் நேரடிச் சாட்சியங்களையும் நேரடியாக கண்டிருப்பவர் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தை வலுவான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றினுள் வைத்திருப்பதற்கான அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று விநயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

அதுமட்டுமன்றி கடந்த ஐ.நா. தீர்மானங்களின்போது பாதிக்கப்பட்ட தரப்பாக இருக்கும் தமிழினம் என்பது தெளிவாக குறிப்பிடப்படாத நிலைமையொன்று காணப்படுகின்றது. அவ்விதமான மயக்க நிலைமைகளைத் தவிர்க்கும் வகையில் புதிதாக அமையும் பிரேரணை காணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கும் எனது மக்களுக்கும் அதீதமாக உள்ளது.

அந்த விடயம் தொடர்பாகத் தாங்கள் கரிசனை செலுத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன் சாத்தியமான நீதிப் பொறிமுறை ஒன்றினூடாக ஐக்கிய நாடுகள் சபையும், அதன் உறுப்பு நாடுகளும் அதியுச்ச அழுத்தத்தை இலங்கைக்குக் கொடுப்பதன் மூலம் மட்டுமே நீதி, நியாயம் உள்ளிட்டவை நிலைநாட்டப்படும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

எனது மக்கள் சார்ந்து நான் இத்தால் தங்களிடத்தில் முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பாக மிகக்கூடிய கரிசனையை செலுத்துவீர்கள் என்ற பெரும் நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.- என்றுள்ளது.

## தனிமைப்படுத்தலிலிருந்து சில இடங்கள் விடுவிப்பு

நாட்டில் தனிமைப்படுத்தப்பட்ட மேலும் சில இடங்கள் இன்று (திங்கட்கிழமை) முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படவுள்ளது.

அதன்படி இன்று அதிகாலை 5 மணி முதல் டாம் வீதி, வாழைத்தோட்டம் மற்றும் மருதானை பொலிஸ் பிரிவுகளில் விதிக்கப்பட்ட தனிமைபடுத்தல் உத்தரவு நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கொழும்பு 2 இல் உள்ள வாகந்தை மற்றும் ஹுனுபிட்டிய பகுதிகளும் விடுவிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## அமைதியாக....

**( 06 ஆம் பக்கத் தொடர்ச்சி..)**

நான் வன்முறைக் கலாசாரத்தை விரும்புவதில்லை. மாறாக நீதியின் வழியில் எமக்கு கிடைக்க வேண்டிய சகல உரித்துக்களும் நேர்மையான அரசியல் முன்னெடுப்புக்கள் வழியாகக் கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்பவன். ஆனால் தொடர்ச்சியான வன்முறைகளும் அடக்குமுறைகளும் நில அபகரிப்புக்களும் முப்படைகளின் உதவியுடன் தமிழ் மக்களுக்கு எதிராக அட்டூழியங்கள் பல புரியப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சிங்களப் பொது மக்கள் இடையே உண்மையை உணர்த்த வேண்டும். உலக நாடுகளுக்கும் உண்மையை உரக்கக் கூறவேண்டும். சட்டத்தின்பாற்பட்ட சகல நடவடிக்கைகளையும் தவறாது எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தற்போது மேலோங்கியுள்ளது.

இறையருளால் குற்றம் இழைத்தவர்கள் தமது குற்றங்களைள உணர்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எது எப்படியோ எமக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான எமது நடவடிக்கைகள் தொடர வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களையும் அவர்களின் இருப்புக்களையும் உறுதி செய்யும் வரையிலும் எதுவித குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படாத நிலையில் பல ஆண்டுகளாக சிறையில் வாடுகின்ற எமது இளைஞர்,யுவதிகள் விடுவிக்கப்படும் வரையிலும் எமது பணி ஓயாது. மக்கள் நலனுக்காக நாம் யாவரும் ஒன்று சேர்ந்து பணியாற்ற முன்வருவோமாக. இந்த நூல் வெளியீடு எம் மக்கட் தலைவர்களை ஒன்று சேர்ப்பதாக. - என்று தெரிவித்தார்.

# பூமியை நாம் மென்மேலும் சூடுபடுத்துவது கொரோனாவை விடக் கொடும் பேரிடராகும்

## பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சியில் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை



உலகம் காலநிலை மாற்றத்தின் கடுமையான விளைவுகளுக்கு முகம்கொடுக்கத் தொடங்கியுள்ளது. நீண்டு செல்லும் கோடை, வருடாந்த மழை வீழ்ச்சியைச் சில நாள்களிலேயே கொட்டித்தீர்க்கும் அளவுக்குக் குறுகி வரும் மாரி, அதிவேகத்துடன் அதிகநேரம் நின்று தாக்குகின்ற புயல்கள், புயல் மழையால் நீர்ப் பிரளயம் போல ஏற்படும் வெள்ளப் பெருக்குகள் என்று இயற்கை தன் சீற்றங்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. இவற்றுக்கெல்லாம், பெற்றோலிய எரிபொருள்களை எரித்துத் தள்ளுவதால் வளியில் குவிந்து கொண்டிருக்கும் கரிக்காபனால் பூமி சூடாகி வருவதுதான் அடிப்படைக் காரணமாகும். இதனைக் கருத்திற்கொள்ளாது பூமியை நாம் மென்மேலும் சூடுபடுத்துவது கொரோனாவை விடக் கொடும் பேரிடராக அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், சுனாமி நினைவு நாளான நேற்ற. முன்தினம் (26.12.2020) இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சி திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கடல்நீர் சூடாகுவதால் கடற்காற்றில் சேரும் நீராவியின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, புயலின் அழிப்புச்சக்தியும் அதிகரித்து வருகிறது. கடல் சூடாகிக் கடல் நீர் விரிவடைவதாலும், பனி மலைகள் உருகி வழிவதாலும் கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றால் கரையோரப் பிரதேசங்கள் அடிக்கடி புயல்களுக்கு முகம் கொடுப்பதோடு கடல் நீரினுள் மூழ்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

பனிப்படுக்கைகளின் கீழே மனிதர்கள் பூமியில் தோன்றுவதற்கு முன்னர் காணப்பட்ட வைரஸுக்கள் இப்போதும் உறை நிலையில் இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பனி உருகுவதால் இவ்வைரஸுக்கள் வெளிப்பட்டு மனிதர்களைத் தாக்குகின்ற அபாயமும் ஏற்பட்டுள்ளது. இவ்வைரஸுக்கள் மனிதர்களுக்குப் புதியன என்பதால், இவற்றுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டிருக்காத காரணத்தால் பெரும் கொள்ளை நோய்களுக்கு மனிதர்கள் ஆட்பட நேரிடும்.

கொரோனா நோயை இல்லாதொழிப்பதற்கு உலகின் முழு நாடுகளும் ஒன்றுபட்டுப் போராடி வருகின்றன. ஆனால், நாம் வெளியேற்றி வருகின்ற கரிக்காற்றைக் கட்டுப்படுத்தக் கோருகின்ற ஐக்கியநாடுகள் சபையின் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் உலகநாடுகள் ஒன்றுபடத் தயாராக இல்லை. தங்களது அபிவிருத்தி பாதிக்கப்படும் என்று கூறி பெற்றோலிய எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்குப் பல நாடுகள் பின்னடித்து வருகின்றன.

கொரோனோ நோய்க்கான தடுப்பு மருந்துகள் பயன்பாட்டுக்கு வந்ததும் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம். ஆனால், காலநிலைப் பிறழ்வினால் ஏற்பட்டுவரும் இயற்கையின் கொடும் சீற்றங்களை எவராலும், எவற்றாலும் கட்டுப்படுத்த முடியாது. இவற்றை நிறுத்துவதற்குக் காற்றைக் கரிப்பிடிக்க வைத்துப் பூமியைச் சூடுபோடுகின்ற எமது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதுதான் ஒரே வழி. - என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச. சர்வராஜாவின்ன் சிறப்புரையும், கடற்கோள், கொரோனா போன்ற பேரிடர்களினால் மரணித்தவர்களுக்கு நினைவு அஞ்சலியும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகங்களை அடக்க வழக்குத் தாக்கலா? விளைவுகளைச் சந்தித்தே தீரும் ராஜபக்ஷ அரசு

## சந்திரிகா அம்மையார் எச்சரிக்கை

'உதயன்' உள்ளிட்ட தமிழ் ஊடகங்களை அடக்க வழக்குத் தாக்கல் செய்ய அரசு முனைந்துள்ளது. இது எந்த வகையில் நியாயம்? இலங்கை ஜன நாயக நாடு என்றால் பத்திரிகைச் சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும் இருக்க வேண்டும். இதை இந்த அரசு கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகளை விரைவில் சந்தித்தே தீரும்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் அரசை தீர்மானிக்கும் வல்லமை ஊடகங்களுக்கும் இருக்கின்றது. ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை வைத்தே யாரை ஆட்சியில் அமர்த்துவது என்ற தீர்மானத்தைப் பெரும்பாலான மக்கள் எடுப்பார்கள்.

இந்தநிலையில், ஊடகங்கள் மீது மீண்டும் ராஜபக்ஷ அரசு கைவைக்க ஆரம்பித்துள்ளது. அதனால் பாரிய விளைவுகளை அரசு சந்திக்க வேண்டிவரும்.

2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு கவிழ்வதற்குப் பெரும்பாலான ஊடகங்களின் ஒற்றுமையான பணியே காரணம். ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வடக்கிலுள்ள ஊடகங்களும், தெற்கிலுள்ள ஊடகங்களும் பெரும் இழப்புக்களைச் சந்தித்திருந்தன.



ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். பலர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். சிலர் கைதுசெய்யப்பட்டு சித்திர வதைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஊடகங்கள் சந்தித்த அவலங்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

ஊடகங்கள் மீது கைவைத்த காரணத்தால்தான் மஹிந்த ராஜபக்ஷ அரசு சர்வதேச ரீதியில் அவப் பெயரைச் சுமக்க நேர்ந்தது. அதனால் ஆட்சியும் கவிழ்ந்தது.

கடந்த நல்லாட்சியில் ஊடகங்கள் முழுச் சுதந்திரத்துடன் இயங்கின. எனினும், 2019ஆம் ஆண்டு நவம்பரில் துரதிஷ்டவசமாக ஆட்சி மாறியது. அதற்குப் பின்னால் பாரிய சதி நடவடிக்கைகள் மறைந்து இருக் கின்றன.

தற்போதைய புதிய ஆட்சியில் - ராஜ பக்ஷ குடும்பத்தின் மீள் எழுச்சியில் ஊடகங்கள் மீண்டும் நெருக்குவாரங்களைச் சந்திக்க ஆரம்பித்துள்ளன. - என்றார்.

# 350 கிலோ கஞ்சா காங்கேசனில் மீட்பு!



காங்கேசன்துறை, டிசெ.27

காங்கேசன்துறை கடற்கரையில் ஒதுங்கிய சுமார் 350 கிலோகிராம் கஞ்சா பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரே இந்தக் கஞ்சா பொதிகளை இன்று நண்பகல் மீட்டனர்.

எனினும், இவற்றைக் கடத்த முயற்சித்தவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கஞ்சா பொதிகளை நீதிமன்றத்தில் பாரப்படுத்த காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் படவுள்ளன.

# ஆரியகுளத்தில் முதியவர் சடலம்



ந.லோகதயாளன்.
யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்ப்பாணம் ஆரிய குளத்திற்குள் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் ஒன்று இன்று மாலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

65 வயது மதிக்கத்தக்க இந்த முதியவர் நேற்று முதல் காணமல் போயிரிந்த நிலையில் இன்று மாலை குளத்தில் உயிரிழந்த நிலையில் சடலமாக கண்டுகொள்ளப்பட்டுள்ளார்.

குளத்தில் ஒரு சடலம் மிதப்பதனை அவதானித்தபோது காணாமல் போன முதியவர் என அடையாளம் காணப்பட்டபோதும் சடலம் இதுவரை மீட்கப்படவில்லை.

## வீடு வாடகைக்கு தேவை

வேலைவாய்ப்பை உருவாக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சிறிய கைத்தொழில் நிறுவனத்துக்கு வீடு நீண்ட கால வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு 0717777559

## அரசியல் கைதிகள் விடுதலையை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், அவர்களின் உறவுகளின் வேண்டுகோளுக்கிணங்க சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தக் கோரியும், அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது உறவுகளின் விடுதலைக்காக இன, மத, கட்சி பேதமின்றி அனைவரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போது நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் அபாயத்தைக் கருத்தில்கொண்டு, சமூக இடைவெளியைப் பின்பற்றியும், சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுங்கள் - என்றுள்ளது.

## மாகாண சபைத் தேர்தல் வேண்டாம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராகக் கடும் போக்குவாத பௌத்த தேரர்களும், அமைச்சர்களும் ஓரணியில் நின்று போர்க்கொடி தூக்கியுள்ளனர். மாகாண சபைத் தேர்தலை இப்போதைக்கு நடத்த வேண்டாம்என்று அவர்கள் வலியுறுத்திவருகின்றனர்.

புதிய அரசமைப்பு தயாரிக்கப்படும் வரையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தக் கூடாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின்படி புதிய அரசமைப்பை உடன் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அந்தவகையில் புதிய அரசமைப்புவரும்வரைக்கும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எவருமே வாய்திறக்கக்கூடாது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்த நிலைப்பாட்டிலிருந்து தான் ஒருபோதும் பின்வாங்கமாட்டார் எனவும், தனது இந்தக் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காலி பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, மாகாண சபைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். **(06ஆம் பக்கமும் பார்க்க)**

## வடக்கு, கிழக்குக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்திய மாகாணங்களிலும் பதுளை மாவட்டத்திலும் பலத்தமழை பெய்யக்கூடும் என்றும், மழை வீழ்ச்சி 150 மில்லிமீற்றருக்கு அதிகமாக காணப்படலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மழைபெய்யும்போது மின்னல் தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளது எனவும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பு யோசனை இன்று .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரேடியாகப் போய் அதற்குரிய அலுவலகத்தில் கையளிப்பது எனக் கூட்டமைப்பு முன்னர் முடிவு செய்திருந்தது.

ஆனால் இப்போது - பெரும்பாலும் இன்று - அது 'கூரியர்' மற்றும் மின்னஞ்சல் மூலம் சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரியவந்தது.

## சனி பெயர்ச்சி ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமை குறையும். உடல் நலம் பாதிக்கும் என்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வேலை தேடுபவர்களுக்கு பொறுமை தேவை. வேலையில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடத்தில் கவனமாகப் பழக வேண்டும். சொந்த தொழில் செய்பவர்கள் சிறப்பாக செயலாற்றுவார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் கூட்டாளி உங்களை ஏமாற்றுவதற்கு வாய்ப்பு உள்ளது. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. மந்த நிலை இருக்கும். படிப்பில் கவனம் தேவை உயர் கல்வி படிக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு நீங்கள் விரும்பிய படிப்பில் சேர இடம் கிடைப்பது சிறிது கஷ்டமான விஷயம்தான். அரசியல்வாதிகள் மாற்றங்களை சந்திப்பார்கள். திருமண முயற்சி செய்ய விரும்புபவர்கள் இன்னும் சிறிது காலம் பொறுமை காக்காக வேண்டும்.

**கும்பம்:-**



கும்பராசி அன்பர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இந்த பெயர்ச்சிக்குப் பிறகு அயன சயன போகம் மற்றும் விரய ஸ்தானம் என்று கூறப்படும் 12ஆம் இடமான மகர ராசிக்கு இடம் பெயர் கிறார். இது வீண் விரயம் ஏற்படும் காலம். உங்கள் குடும்ப வியம் குறித்து மூன்றாவது நபரிடம் ஆலோ சனை கேட்காதீர்கள். இது சோதன காலம் என்பதால் குறுக்கு வழிகளை விட்டு விட்டு நேர் வழியில் செல்லுங்கள். எல்லா வியங்களிலும் அடக்கம், பணிவு, பொறுமை அவசியம் தேவை. உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. அவசரப்பட்டு வார்த்தைகளை அள்ளி வீசி விட்டால் உறவுகளில் விரிசல் ஏற்பட்டு விடும். வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலை கிடைப்பதற்காக முயற்சி செய்து கொண்டி ருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்த சம்பளமும் கிடைத்து விடும். ஆனால் செலவுகளும் வந்து சேரும். தொழிலில் புதிய முதலீடுகள் எதையும் செய்ய வேண்டாம். நீங்கள் செய்து கொண்டி ருக்கும் தொழிலை அப்படியே வழி நடத்தி செல்வது நல்லது. சங்கடங்களும் சோதனையும் நிறைந்த காலம் என்றாலும் உங்களுக்கு தேவைப்படும் மன வலிமையையும் அந்த சனி பகவானே அளிழித்து விடுவார் என்பது உங்களுக்கு ஆறுதலான விடயம். அடக்கம் பணிவு, பொறுமை மிகவும் அவசியம்.

**மீனம்:**



மோட்சராசி என்று கூறப்படும் மீனராசியை ஜென்ம ராசியாகக் கொண்ட அன்பர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு கர்ம ஸ்தானம் எனப்படும் பத்தாம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், இந்த பெயர்ச்சியில் லாப ஸ்தானம் என்று கூறப்படும் பதினொன்றாம் வீட்டில் அதாவது தனது சொந்த வீடான மகர ராசியில் சஞ்சாரம் செய்ய விருக்கிறார். எனவே இந்த பெயர்ச்சி உங்களுக்கு லாபம் அளிக்கும் பெயர்ச்சி என்று கூடக் கூறலாம். இதுவரை வாழ்க்கையில் இருந்து வந்த தடைகள் யாவும் விலகும். வாழ்வில் மேன்மை கிட்டும். நீங்கள் பல வகையிலும் பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பினைப் பெறுவீர்கள். என்றாலும் சேமிப்பு என்பது மிகவும் முக்கியம் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். வீடு வாகன வசதிகள் அமையும். நீங்கள் விரும்பும் இடமாற்றம், ஊதிய உயர்வு போன்றவை கிட்டும் வாய்ப்பு உள்ளது. தொழில் செய்பவர்களுக்கு புதிய தொழில் தொடங்க வாய்ப்பு கிட்டும். தொழிலை விரிவு படுத்த ஏற்ற நேரமாக இந்த பெயர்ச்சி இருக்கும். வங்கிக் கடன்கள் கிட்டும். திருமணத் தடைகள் விலகும். கணவன் மனைவி ஒற்றுமை காணப்படும். குழந்தை பாக்கியம் கிட்டும். குழந்தைகள் வளர்ப்பில் கவனம், கண்டிப்பு, அக்கறை தேவை. மாணவர்கள் சோம்பலை அறவே நீக்க வேண்டும். கடினமாக உழைத்துப் படிக்க வேண்டும்.

# கொவிட் தடுப்பூசி தொடர்பான கலந்துரையாடல் அடுத்தவாரம்!

கொரோனா தடுப்பூசியை நாட்டுக்கு கொண்டு வருவது மற்றும் தடுப்பூசியை வழங்குவதற்கான செயற்றிட்டம் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியை நாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்கவிற்கு அண்மையில் வழங்கப் பட்டது.

குறிப்பாக முழுமையான ஆய்வுக்குப் பின்னர் தடுப்பூசிகளைக் கொண்டுவர உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுகாதார அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவும் அவருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று டிசெம்பர் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அடுத்தகட்ட விவாதங்கள் நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க குறிப்பிட் டுள்ளார்.

மேலும், எதிர்வரும் இரண்டு வாரங்களில் இது தொடர்பான பதிலை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தடுப்பூசி திட்டத்தில் சுகாதாரப் பணியாளர்கள், பாதுகாப்புப் படையினர், அதிக மக்கள் சனத்தொகை கொண்ட பிரதேசங்கள், கொழும்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக் கப்படும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

# கொரோனாவிலிருந்து 650 பேர் குணமடைவு!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 32 ஆயிரத்து 701 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 650 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 40 ஆயிரத்து 380 ஆக உயர்ந்துள்ளது. இதில் 7 ஆயிரத்து 492 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை 433 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத் தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2020 இல் வெளியிடப்பெற்றது.



# நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க முடியாது!

## அட்மிரல் சரத் வீரசேகர பிடிவாதம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வரவுள்ளதாகக் குறிப்பிடப் படும் புதிய பிரேரணை தொடர்பாக அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும்.

நாட்டின் இறையாண்மையை சர்வதேச மட்டத்தில் எப்போதும் விட்டுக் கொடுக்க முடியாது. என பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எதிர் வரும் மார்ச் மாதம் இடம் பெறவுள்ள 46 ஆவது கூட்டத் தொடர் தொடர்பாக வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அமெரிக்கா ,பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங் கையின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் கொண்டு வரவுள்ளதாகக் குறிப்பிடப்படும் புதிய பிரேரணை தொடர்பாக அரசாங்கம் உரிய அவதானம் செலுத்தும்.

புதிய பிரேரணையில் எவ்வகையான விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன என்பதில் அதிக அவதானம் செலுத்தப்படும். நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த பிரேரணைக்கும் இணக்கமாகச் செயற்பட மாட்டோம்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட 30/1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் இலங்கையின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைத் தெளிவாக குறிப் பிட்டோம்.

நாட்டுக்கு எதிரான பிரேரணைகளுக்கு அடிபணிய மாட்டோம் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறு தியை நிறைவேற்றும் வகையில் 30/1 பிரேரணைக்கு இணையனுசரணை வழங்குவதில் இருந்து விலகி னோம். நாட்டின் சுயாதீனத்தன்மையைக் கருத் திற் கொண்டே அரசாங்கம் எந்நிலையிலும் செயற் படும்.


இலங்கை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் கொண்டு வரப்படும் பிரேரணைகள் அனைத்தையும் ஏற்க வேண் டிய தேவை கிடையாது. நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத் தாத விடயங்களுக்கு அனுசரணை வழங்குவது அரசாங் கத்தின் பொறுப்பாகும்.

2019 ஆம் ஆண்டுக்கு பிறகு வெளிவிவகார கொள்கை திருத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் பொதுத்தன்மையுடன் செயற்படும். எத்தரப்பினருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்பட மாட் டாது.

நாட்டுக்கு எதிராக செயற்படும் சர்வதேச அமைப்புக் களில் இருந்து விலகவும் தயார் என ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இதுவே அரசாங்கத்தின் கொள்கையாகும்.– என்றார்.

# கொரோனா மரணங்கள் தொடர்பில் மதங்கள் தீர்மானிக்க முடியாதாம்!

## ஓமல்பே சோபித தேரர் இப்படி வியாக்கியானம்



கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலைத் தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்ற தீர்மானத்தை எடுப்பது மதங்களுக் குப் பொறுப்பானதல்ல என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கம் தொடர் பாக ஆராய நியமிக்கப்பட்ட சுகாதார குழுவின் தீர்மானததுக்கு எதிராக செயற் படுவது முறையற்றதாகும்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் மரணங்களுக்கு என்ன செய்வது என்று மதத் தலைவர்களிடம் வினவுவது பயனற்றது. அத்துடன் தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சி தலைவர்களிடம் வினவுவதும் பயனற்றது.

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர் பான தீர்மானத்தை சுகாதார குழு ஊடாக அரசாங்கமே எடுக்க வேண்டும். கொவிட் –19 வைரஸ் தாக்கம் தொடர்பில் எடுக் கும் தீர்மானங்கள் தற்போது பலதரப் பட்டவையாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கொவிட் – 19 வைரஸ் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை அனைத்துத் தரப்பி னரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இனங் களுக்கு சாதகமாகத் தற்போது செயற் படுகின்றமை மாறுப்பட்ட விளைவை ஏற்படுத்தும்.– என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகள் பலர் சாட்சிகளே இல்லாமல் உள்ளே!

## கொலையாளிகள் வெளியே என்கிறார் கஜேந்திரன் எம்.பி.




சாட்சியங்களே இல்லாத தமிழ் அர சியல் கைதிகளை தொடர்ந்தும் சிறை யிலடைத்துள்ள இந்த அரசு கொலை யாளி பிள்ளையானை விடுதலை செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப் பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத் தின் 15 ஆம் ஆண்டு நினைவு தினம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிள்ளையான் கொலையாளி சந்தேக நபருக்கு எதிராக சான்று இல்லை என இந்த அரசின் காலத்தில் அவருக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எந்தவொரு சாட்சியமும் இல்லாமல் பல ஆண்டுகளாக சிறையில் இருக் கும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை இல்லை.

இதனால் தான் உள்நாட்டு விசார ணையில் நம்பிக்கை இல்லை என் பதை நாம் ஐ.நா. வரை சென்று கூறுகி றோம். – என்றார்.

# திருகோணமலையில் 7 பேருக்கு தொற்று!

திருகோணமலை மாவட் டத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டறியப் பட்டவர்களில் ஐவர் மூதூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய இருவ ரும் திருகோணமலை நகரைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருகோண மலையில் கொரோனா தொற் றாளர்களின் மொத்த எண் ணிக்கை 120 ஆக அதிகரித் துள்ளது.

இதன்படி, திருகோண மலை நகரில் 66 பேரும், மூதூரில் 32 பேரும் கிண்ணி யாவில் எட்டுப் பேரும் தம்பலகாமம் பகுதியில் ஆறு பேரும் கொரோனா தொற்றா ளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், சேருவில பகு தியில் மூவருக்கும் கோம ரங்கடவல மற்றும் குச்ச வெளி பகுதிகளில் தலா ஒவ் வொருவருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட் டுள்ளது.

# மாறுபட்ட புதிய கொரோனா தொற்றை பி.சி.ஆரால் உறுதிப்படுத்த முடியாது!

## விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்



கொவிட்–19 வைரஸானது, எவ்வித அறிகுறிகளுமின்றி உடலில் எவ்வித மாற்றங்களையும் காண்பிக்காமல் ஆயிரக்கணக்கானோரிடம் பரவி யுள்ளது. எனவே தற்போது நபரொரு வருக்கு வைரஸ் தொற்று ஏற்பட் டாயின் அவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா அல்லது புதிய வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற வேறு பாட்டை பி.சி.ஆர். பரிசோதனையின் ஊடாகக் கூட உறுதிப்படுத்த முடியாது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரி வித்தார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒக்ரோபர் 4 ஆம் திகதி நாட்டில் ஆரம்பமான இரண்டாம் அலை இரு மாதங்களில் தீவிரமாக பரவலடைந் துள்ளது. எனினும் இதனை மேலும் கட்டுப்படுத்த மக்களின் முழுமை யான ஒத்துழைப்பு அத்தியாவசியமா னதாகும். இதன் வைரஸ் அதன் தன் மையை மாற்றி புதிய வகை வை ரஸாக இங்கிலாந்தில் மாத்திரம் பரவ லடையவில்லை. வேறு நாடுகளிலும் பரவலடைவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன. எனவே இலங்கையில் கொவிட் வைரஸை முற்றாக ஒழிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

கொவிட் – 19 வைரஸானது எந்தவோர் அறிகுறிகளும் இன்றி ஆயிரக்கணக்கானோரிடம் பரவியுள் ளது. எனவே தற்போது வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் அதன் எந்த வகை தொற்றியுள்ளது என்பதை அறி குறிகள் மூலம் இனங்காண முடியாது.

அது மாத்திரமல்ல. நாம் வழமை யாக முன்னெடுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் ஊடாகக் கூட அதனை இனங்காண முடியாது. வைரஸின் உள்ளிடம் யாதென இனங் கண்டால் மாத்திரமே கொவிட் – 19 வைரஸா அல்லது புதிய வகை வைரஸா என்பதைக் கண்டறிய முடி யும்.– என்றார்

# குலகெதரவில் கோரவிபத்து: சாரதி பலி; 6 பேர் காயம்!

கலகெதர – ரம்புக்கன வீதியில் சாரதியின் கட்டுப் பாட்டை இழந்த பாரவூர்தி ஒன்று கடந்த சனிக்கிழமை விபத்துக்குள்ளாகியதில் அதன் சாரதி உயிரிழந்துள்ள மையுடன், ஆறு பேர் காயமடைந் துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த பாரவூர்தியின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறின் காரணமாகவே அதனை சாரதி யால் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதாக பொலி ஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மோட்டார் வாகன பரிசோதனை அதிகாரிகளிடமும் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட் டுள்ளது.

விபத்தின் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி மேலும் சில வாகனங்களுடன் மோதிச் சென்று, வர்த்தக நிலையமொன்றிலும் மோதியுள் ளதாக விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள் ளனர்.

இந்நிலையில் பஸ், மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களை ஓட்டும் சாரதிகள் , வாகனத்தை ஓட்டுவதற்கு முன்னர் வாகனத்தின் இயந்திர பிரிவு, வாகனச் சில்லுகள் மற்றும் சமிஞ்சை ஒளி விளக்குகள் ஒழுங்காக இயங்குகின்றனவா? என்பது தொடர்பில் பரீட்சித்து பார்த்ததன் பின்னரே அதனை ஓட்டவேண் டும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களிலே இது போன்ற விபத்துகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அதனால் சாரதிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.